# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

6-13

ஆ. சேக்கிழார் தொண்டையின்

11.10.69



# நேற்றைய அரசியல் இன்றைய வரலாறு

—புலவர் கோ. அண்ணாமலை—

திருச்சி தில்லை நகரில் திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள், "இன்றைக்குச் சென்னை உயர் நீதிமன்றத்து நீதிபதிகளில் பதினெட்டுப்பேருக்குப் பதினான்கு பேர் தமிழர்களாக இருக்கிறார்கள் என்றால் அது தமிழருக்காகப் பெரியார் இராமசாமி நடத்திவந்த பெரும் போராட்டங்களினால்தான்!" என்று பேசினார்.

இதற்கு நியாயமாக நடு நிலைமையோடு பொருள்கொள்ள விரும்பாத ஒரு சிலர் வரிந்து கட்டிக்கொண்டு வந்துவிட்டார்கள், வகுப்புவாத சாயம்பூச!

"சென்னைப் பல்கலைக் கழகத்துப் பெருமையே போய்விட்டது" —என்றும்,

"ஒரு பல்கலைக் கழகத் துணை வேந்தர் இப்படியா பேசுவது" என்றும்,

"அவர் தனது தரத்தை உயர்த்திக்கொள்ள வேண்டும்" என்றும்,

"இவர் பிராமணர்களை வெறுப்பவர்" என்றும் "இவரிடம் எப்படிப் பல்கலைக் கழகத்து மாணவர் படித்துப் பட்டம் பெற்று விளங்கப் போகிறார்கள்" என்றும் அவர்களுக்குத் தோன்றியபடியெல்லாம் "ஆசிரியருக்குக் கடிதம்" பகுதியில் இந்துப் பத்திரிகையில் 'வெளு வெளு' என்று வெளுத்து வாங்கியிருக்கிறார்கள்.

அவர்கள் எழுதியுள்ள எல்லாக் கடிதங்களும் அவர்களுடைய 'உத்வேகத்தைக், காட்டுகின்றன. அந்த 'உத்வேகம்' பிராமணர்களைக் குறித்துப் பேசுகிறார்' என்ற எண்ணத்திலிருந்து உதித்ததாகும்.

ஒரு வழக்கறிஞர், திரு. சுந்தரவடிவேலு பிராமணரிடம் தனக்குள்ள மனக்குறையை—வெறுப்பை வெளிப்படுத்துகிறார்' என்கிறார்.

இன்னொருவர் திரு. நம்பூதிபாடும் திரு. ஏ. கே. கோபாலனும், திரு. மத்தாய்மஞ்சுரானும் வெளியிட்ட கருத்துக்களோடு திரு. சுந்தரவடிவேலுவின் பேச்சை ஒப்பிடுகிறார். 'பயங்கரம் பயங்கரம்' என்று அலறுகிறார்.

இப்படி அலறவேண்டிய அவசியம் என்ன வந்தது என்பது எளிதில் விளங்குவதாயில்லை.

திரு. பெரியார் இராமசாமி தமிழர்களுக்காக—அவர்களுடைய முன்னேற்றத்துக்காக எத்தனையோ போராட்டங்களை நடத்தியவர்அவர் நடத்திய போராட்டங்களின் விளைவாகத் தமிழர்கள் உயர்நீதி மன்றத்தில் நீதிபதிகளாக வரும் அளவுக்குத் தங்களை உயர்த்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத்தான் திரு சுந்தரவடிவேலுசொல்லியிருக்கிறார்.

வெள்ளைக்காரன் காலத்திலேயே நீதிபதியாகத் தன்னை உயர்த்திக் கொண்டார்கள் திரு. முத்துசாமி ஐயர் போன்றவர்கள். வெள்ளைக்காரன் காலத்தில் வெள்ளைக்காரனோ அல்லது முத்துசாமி ஐயரைப் போன்றவர்களோதான் உயர்நீதி மன்றத்தில் நீதிபதிகளாக ஆகும் அளவுக்கு நிலைமை இருந்தது. அது வெள்ளைக்காரனுக்கும் திரு. முத்துசாமி ஐயரைப் போன்றவர்கட்கும் இருந்த திறமைகளால்தான்!

அத்தகையதோர் திறமையை பெரியார் இராமசாமி நடத்திய பல போராட்டங்களினால், தன்னுணர்வும் தன்மதிப்புணர்வும் பெற்றெழுந்த தமிழர்கள் இன்றைக்குப் பெற்றிருக்கின்றனர் என்பதைத் திரு. நெ. து. சுந்தரவடிவேலு "பதினெட்டு நீதிபதிகளில் பதினான்கு பேர் தமிழர்கள்" என்றும் "அதற்கு மூல காரணமாவர்—இப்படிப்பட்ட பெரும் பொறுப்புக்கள் இருக்கின்றன; இவைகளை வகித்துத் திறம்பட நடத்த வேண்டும்' என்ற எழுச்சியை உண்டாக்கித் தந்தவர் —பெரியார் இராமசாமி"—என்றும் கூறுகிறார்.

"பதினெட்டு நீதிபதிகளில் இன்றைக்குப் பதினான்கு பேர் தமிழர்கள் —அதற்குக் காரணம் நீண்ட நெடுங்காலமாக அறியாமையிலும் மூட நம்பிக்கைகளிலும் மூழ்கிக்கிடந்த தமிழர்களைத் தட்டியெழுப்பி பெரியார் நடத்திய பல போராட்டங்கள் —என்று சொன்னால் அது உண்மையில் புறம்பானதா? அல்லது இங்கே நடைபெறாத கற்பனைச் சரித்திரமா?

'தமிழர்கள் எல்லாப் பெரும் பொறுப்புகளையும் வகிப்பதற்குத் தங்களைத் தகுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்—அதற்கு மூடப்பழக்க வழக்கங்களிலிருந்தும் அறியாமை இருட்டிலிருந்தும் முதலில் தமிழர்கள் வெளிப்படவேண்டும்' என்று பெரியார் இராமசாமி போராடவில்லையா?

'பச்சைத் தமிழர் காமராசர்' என்று சொல்லி அவரைப் பெரியார் ஆதரிக்கவில்லையா?

பெரியார் நடத்திய போராட்டங்கள், பேசிய மேடைப் பேச்சுக்கள், எழுதிய பகுத்தறிவு எழுத்துக்கள் எல்லாம் சேர்ந்து இன்றைக்குப் பதினெட்டு உயர்நீதி மன்ற நீதிபதிகளில் பதினான்கு தமிழர்களையும் காணச் செய்திருக்கின்றன. இல்லாவிட்டால் தமிழர்கள் இன்னும் உயர்நீதி மன்றத்து பியூன்களாகவும், உயர்நீதிமன்ற நீதிபதிகளின் வீட்டுத் தோட்டக்காரர்களாகவும், கார் டிரைவர்களாகவும் இருப்பார்கள். அப்படிக்கில்லாமல் உயர்நீதி

(15-ம் பக்கம் பார்க்க)

**திரு. சுந்தரவடிவேலு அவர்கள், பல்கலைக்கழகத் துணை வேந்தர் பொறுப்பேற்றுக்கொண்டது முதலே, தமிழக ஏடுகள் சில ஓலமிடத் தொடங்கி இருக்கின்றன! இதுபோன்ற ஒப்பாரிகள் மூலம் தமிழை, தமிழரை தாழ்ந்துவிடச் செய்ய முடியுமென்று அந்த ஏடுகள் நம்பினால், நம் அனுதாபங்களைத்தான் படைத்துக்கொள்ள வேண்டும்! தமிழைத் தமிழரைப் பழிக்கும் எவனும் தன்னையேகூட வாழவைத்துக் கொள்ள முடியாது. நாட்டை, கேடுகெட்ட ஒரு சமுதாயத்தை மட்டும் வாழ வைத்துவிட முடியுமா?**

# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

மலர் 6 | 12—10—69 | இதழ் 13


# காந்தியப் பாதை — ஒரு வேறுபாடு?

உலகமுழுதும் காந்தியடிகளது நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடிக் களித்திருக்கிறது. இந்தியத் துணைக்கண்டத்துக்கு வெளியே மற்றெந்த நாட்டையும் விட ரஷ்ய நாடு, மிகச்சிறப்பாக இந்த விழாவினைக் கொண்டாடி இருக்கிறது என்று தெரியவருகிறது, வெளி நாடுகளின் தூதுவராலயங்கள் வெளியிடும் வெளியீடுகளிலிருந்து.

“மக்களே போல்வர் கயவர்” என்றார் வள்ளுவப் பெருந்தகை. கொலைகாரனாயிருந்தாலும், கொள்ளைக் காரனாயிருந்தாலும், பொய்யனாயிருந்தாலும், சூதாடியாயிருந்தாலும், காமுகனாக இருந்தாலும், கயமைச்செயல் புரிவோனாயினும், வஞ்சகனாயிருந்தாலும், வாயாடியாயிருந்தாலும், முட்டாளாயிருந்தாலும், மூர்க்கனாயிருந்தாலும் இவர்கள் அனைவருமே அறிவாளர் மேதை, சிந்தனைச்சிற்பி, ஞானி என்று புகழப்படுகின்றவர்களைப் போன்று தோற்றத்தில் எவ்வித மாறுபாடும் கொண்டிருப்பதில்லை. இதனாலேயே “மக்களே போல்வர் கயவர்” என்றார் அவர்.

அறிவாளரும், அறிவற்றாரும் உருவஒற்றுமையிலே ஒன்றாயிருப்பதன் காரணமாகவே இருவரும் புகழப் படுவதில்லை. இனங் கண்டு கொள்ளும் இயல்பு காரணமாக இவர் அறிவாளர், இவர் அது அல்லாதார் என்று தெரிந்து தெளியும் மேதைமை காரணமாகவே, காந்தியடிகளை இனங் கண்டு கொண்டு உலகம் அவரைப் பாராட்டுகிறது.

இரஷ்ய நாடு, காந்தியடிகளைப் பல கோணத்தில் படம் பிடித்துப் பார்த்திருக்கிறது. அவர் ஒரு தத்துவ ஞானி என்றும், அரசியல்வாதியென்றும், சிந்தனைச் சிற்பியென்றும், அறிவு போதகர் என்றும், அறிஞர் என்றும், மேதை என்றும் வெளிப்படுத்திக் காட்ட முயன்றிருப்பதுடன் மனிதர் என்றும் சுட்டிக் காட்டி பெருமைப்பட்டிருக்கிறது. காரணம், இன்று ஒருவரை ‘மனிதர்’ என்று நம்பி, அவர் வழிச் செல்வதும் நற்பயன் துய்ப்பதும் அரிதாயிருக்கிறதால்!

எனவே, ரஷ்யா, காந்தியடிகளுக்குச் சிறப்பாக விழா எடுத்திருப்பதில் வியப்பில்லை.

ரஷ்யாவைப் பொறுத்தமட்டில் அது இந்தியத் துணைக்கண்டத்து அரசியல் கொள்கைகளுக்கும் கோட்பாடுகளுக்கும் முற்றும் மாறுபாடான கொள்கை, கோட்பாடுகளைக் கொண்டதாகும். அப்படி மாறுபாடான அரசியல் தன்மைகளைக்கொண்ட நிலையில் காந்தியடிகளுக்கு விழாவெடுத்துச் சிறப்பித்திருப்பதும், மிக உயர்ந்த மனிதர் என்று பேசிப் பாராட்டுவதும் பாராட்டுக்குரிய ஒன்றாகும். இதிலே முழுக்க முழுக்க காந்தீய போதனைகளை அந்த நாடு ஏற்றுக்கொண்டது என்று கூறமுடியாவிட்டாலும், காந்தீய போதனைகள் காலத்தால் சாகாதவை; ஞாலத்துக்குத் தேவையானவை என்று மட்டும் அந்த நாடு ஏற்றுக்கொண்டு விட்டது என்று மட்டும் நம்ப முடியும்.

இந்தியத் துணைக்கண்டத்திலிருக்கிற பொதுவுடைமையர்களில் சிலர், ரஷ்யச் சித்தாந்தத்தை அடிப்படையாய்க் கொண்டிருப்போர் என்றும், சிலர் சீனச் சித்தாந்தத்தை அடிப்படையாய்க் கொண்டிருப்போர் எனவும் கூறப்பட்டு, அதன் காரணமாக அவர் வலதுசாரி கம்யூனிஸ்டு என்றோ, இவர் இடதுசாரி கம்யூனிஸ்டு என்றோ இந்த நாட்டில் அழைக்கப்படுகின்றனர்.

ரஷ்யச் சிந்தாந்தங்களை வலதுசாரிகள் கொண்டிருப்பதனாலேயே, காந்தியடிகள் பற்றிய ரஷ்யாவின் கருத்தையும், இங்குள்ளோர் கொண்டிருக்கக்கூடும். ஆனால் உலகம் முழுவதுக்குமே ஒரு புதிராக இருந்து கொண்டிருக்கும் சீனத் தலைவர்களும், அவர்களது சிந்தாந்தங்களும் காந்தியடிகள்மீது எந்தக்கண்ணோட்டம் வைத்திருக்கிறது என்பது எவருக்குமே தெரியாத காரணத்தால்தான், நம் நாட்டிலுள்ள இடதுசாரி கம்யூனிஸ்டுகளுக்கும் இதிலே ஒரு தெளிவு ஏற்படாமலிருக்கிறது என்று நிச்சயம் நம்பலாம். அல்லது சீன நாடு, காந்தியடிகளையும், அவரது போதனைகளையும் மதிப்பதில்லை; எனவே இங்குள்ளோரும் மதிப்பதில்லை என்றேனும் பொருள்கொள்ள இடமுண்டு.

இந்தியத் துணைக்கண்டத்தில், இடதுசாரி கம்யூனிஸ்டுகளின் போக்கு மிகமிகக் கவலைப்படத்தக்க விதத்திலே இருக்கிறது என்ற வகையிலே சிந்தனை செலுத்திப்பார்க்கிறபோது காந்தியத் தத்துவங்கள் பற்றிய அவர்கள் நிலையும் உடன்சேர்ந்துகொள்கிறது.

நிலையையும், நினைப்பையுங்கொண்டு கணிக்கிறபோது, கேரளாவிலும், மேற்கு வங்கத்திலும் எதிர் காலத்தை, அமைதி நிரம்பியதாக இருக்கவிட மாட்டார்கள் இந்த இடதுசாரிகள் என்று எண்ண வேண்டியிருக்கிறது.

கேரளாவில் இன்று நிகழ்ந்துகொண்டிருக்கிறவருந்தத்தக்க அரசியல் நிகழ்ச்சிகள், “மக்கள் நலன்;” “உழைப்பே கடவுள்” என்கிற முழக்கங்களிடமிருந்து மிகுந்த இடைவெளி கொண்டவையாயிருக்கின்றன. இதுபோலவே, மே. வங்கத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கிற கொலைவெறிக் கொடுமைகள், ஜனநாயகத்தைப் பார்த்து கேலிச் சிரிப்பு, சிரிப்பனவாயிருக்கின்றன.

அந்த நிலைக்கு நாட்டை ஆளாக்கிக்கொண்டிருக்கிற இதயங்களையெல்லாம் ஒன்றுதிரட்டி, காந்திய அமைதி நெறி என்ற தூரிகையால் அவர் தம் நெஞ்சத் தடத்தை நீவி விட்டால் நல்லது என்றே தோன்றுகின்றது.

ரஷ்யச் சிந்தாந்தத்தில் நம்பிக்கைக் கொண்டு, நடைபழகிக் கொண்டிருப்போராவது இதுபற்றிய முயற்சியை மேற்கொள்ளவில்லையானால், அவர்களுக்குக்கூட இங்கே இடமில்லாது போய்விடக் கூடும் என்ற கவலையும் நமக்குண்டு.

நாட்டை வாழவைக்கப்போகிறார்களா? கேட்டை அழைத்துத் தரப்போகிறார்களா? என்பதை காலம்தான் கண்டறியவேண்டும்!

# கன்கான் ஆற்றங்கரையில் காஞ்சித் தமிழ்

இந்தியத் துணைக்கண்டத்தின் வடபகுதி, தமிழையும், தமிழரையும் பழித்தநாள் ஒன்று உண்டு. இன்று தமிழைப்புகழ்ந்தால்தான், தமிழரை ஏத்தித் தொழுதால்தான், வையம் தன்னைப் புகழும் என்ற நிலை பெற்றிருக்கிறது.

தமிழகத்திலிருந்து சென்று பம்பாய் பகுதியில் தங்கி தம் நாட்டுக்கும் மொழிக்கும்சேவை செய்யும் பம்பாய் தமிழ்ச் சங்கம் போலேவே, புனா சென்று இருக்கும் தமிழர்கள் தமிழ் வளர்ச்சிக்கான எல்லா நடைமுறைகளையும் மேற்கொண்டிருக்கிறார்கள்—அந்த நடைமுறையில் ஒன்றுதான் இது.

இதுபோன்ற தமிழ் நிகழ்ச்சிகள் மூலம்தான், கனகவிசயர்கள் தோன்றுவதைத் தடுக்க முடியும் என்பது பெருமைக்குரியதல்லவா!

• • •

மராட்டிய மாநிலம் நாகபுரி மாநகரில் செப்டம்பர் 13,14 ஆகிய இரு நாட்களில் பாரதியார் விழாவும் வள்ளுவர் 2000 ஆண்டு விழாவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன.

பாரதி தமிழ்ச் சங்கம்
தென்னிந்தியக் கழகம்
தென்னிந்திய மகளிர் மன்றம்
தென்னக நுண்கலைக் கழகம்
நாகபுரி பல்கலைக் கழகத் தமிழ் மாணவர் மன்றம்

ஆகிய ஐந்து அமைப்புக்களும் சேர்ந்து நடாத்திய விழாக்களாதலால் அவை சீரும் சிறப்பும் பெற்றுத் திகழ்ந்தன. நாகபுரி நகரில் பல்வேறு பணிகள் ஆற்றிவரும் பைந்தமிழ் மக்கள் அனைவரும் ஒருங்கே கூடி, பாட்டுக்கொரு புலவன் பாரதிக்கும், வான்புகழ்கொண்ட வள்ளுவப்பெருந்தகைக்கும் விழாக்கள் எடுத்து மகிழ்ந்தனர்.

பாரதி தமிழ்ச்சங்க அமைப்பாளர் திரு. கி. சி. ரா. கிருட்டிணன் அவர்களின் மூலமாக ஐந்து அமைப்புக்களும் சேர்ந்து அனுப்பிய அன்பழைப்பினை ஏற்று, காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரித் தமிழ் விரிவுரையாளரும் செங்கை மாவட்டத் தமிழாசிரியர் கழகம், காஞ்சித் தமிழ்ச் சங்கம் ஆகிய அமைப்புக்களின் தலைவரும், தமிழகத் தமிழாசிரியர் கழகத்தின் துணைத் தலைவருமான திரு மு. பி. பாலசுப்பிரமணியன் எம். ஏ., அவர்கள் மேற்கண்ட விழாக்களில் சிறப்புச் சொற்பொழிவுகள் நிகழ்த்துவதற்காக நாகபுரி வந்து சேர்ந்தார்.

கன்கான் ஆற்றங்கரையில் கவினுற அமைந்திருக்கும் நாகபுரி மாநகரில், பாலாற்றங்கரையின் பைந்தமிழைப் பறைசாற்ற 'கல்வியிற் கரையிலாக் காஞ்சி' மாநகரிலிருந்து வந்திருந்த சிறப்பு விருந்தினரை அகமும் முகமும் மலர அன்புடன் வரவேற்று ஆவன செய்தனர், திரு. கி. சி. ரா. கிருட்டிணன், திரு. விநாயகம் குடும்பத்தினர்

13—9—69 சனிக்கிழமை மாலை 6-30 மணியளவில் 'தரம்பேட்' சரசுவதி வித்தியாலயாவில் 'பாரதியார் விழா' தொடங்கியது. விழாவிற்கு திரு. ஆர். கோபால் தலைமை தாங்கினார். பாரதியார் விழாப் பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர் தங்கள் சொல்திறனை வெளிப்படுத்தினர். தென்னக நுண்கலைக் கழகத்தார் ஏற்பாடு செய்திருந்த இசை நிகழ்ச்சி அனைவருடைய உள்ளத்தையும் ஈர்ப்பதாக இருந்தது. பாரதி தமிழர்ச் சங்க அமைப்பாளர் திரு. கி. சி. ரா கிருட்டிணன் அவர்கள் சிறப்பு விருந்தனர் திரு. மு. பி. பாலசுப்பிரமணியம் எம். ஏ. அவர்களுக்கு "வரவேற்பிதழ்" வாசித்தளித்தார் இறுதியாக சிறப்பு விருந்தினர் "கவிதைப் பொழில்" என்னும் தலைப்பில் அரியதொரு சொற்பொழிவு நிகழ்த்தினார். கன்கான் ஆற்றங்கரையில் காஞ்சித் தமிழின் முழக்கத்தைக் கேட்டு, நாகபுரி வாழ் தமிழ்ப் பெருமக்கள் அனைவரும் நனிமகிழ்ச்சி கொண்டனர். சங்க காலத்திலிருந்து பாரதியார், பாரதிதாசன் காலம்வரை கவிதைப் பொழிலில் பூத்த கவின் மலர்களின் மணத்தின் எடுத்துக் காட்டுகளுடன் விளக்கினார். பாரதியார் கவிதைகளில். சிங்க மராட்டியர் கவிதை கொண்டு என்றும் 'போரில் காலனும் அஞ்சக் கலக்கும் மராட்டியர் என்றும் மராட்டியரைப் பாராட்டும் தன்மையினை எடுத்துக் கூறியதோடு வரலாற்றுச் சான்றுகளுடன் மராட்டியருக்கும் தமிழகத்திற்கும் உள்ள நெருங்கிய தொடர்பினையும் எடுத்து பொழிந்தார். பின் பேச்சுப் போட்டி, இசைப் போட்டிகளில் வெற்றி பெற்றவருக்குச் சிறப்பு விருந்தினர் மூலம் பரிசுகள் வழங்கப்பட்டன. தென்னிந்தியக் கழகத் தலைவர் திரு பி. எஸ். வைத்தியநாதன் அவர்கள் சிறப்பு விருந்தினருக்கு மலர்மாலையும் பூச்செண்டும் அளித்துப் பாராட்டினார். நன்றியுரைக்குப் பின் விழா இனிது முடிந்தது.

14-9-69 ஞாயிறன்று காலை 10 மணிக்கு நாகபுரிப் பல்கலைக் கழகத் தமிழ் மாணவர் மன்றத்தின் சார்பில் பல்கலைக் கழக நூலகக் கட்டிடத்தில் யூ. என். ஐ செய்தி ஸ்தாபன மேலாளர் திரு. வி. வி. ரமணி தலைமையில் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. குமாரி பானுமதி சுவாமிநாதன் (மாணவர் மன்றத் தலைவர்) வரவேற்புரை நிகழ்த்தினார் மாணவர் மன்றச் செயலாளர் திரு. ரமேஷ் இராஜகோபாலன் மாணவர் தமிழ் மன்றத்தின் நடவடிக்கைகள் பற்றிச் சொற்பொழிவாற்றினார். நாகபுரிப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறைப் பகுதி அமைய வேண்டிய அவசியத்தை வலியுறுத்திப் பேசினார், இறுதியாக திரு. மு. பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் "தமிழ் எங்கள் உயிர்" என்னும் தலைப்பில் தமிழ் உணர்ச்சி ததும்பும் தன்மான உரையாற்றினார். எழுத்து அமைப்பிலும் உச்சரிக்கும் எளிமையிலும் இலக்கண வளத்திலும் இலக்கியச் செறிவிலும் தமிழ் மொழி பெற்றிருக்கும் சிறப்பினைச் சீரிய முறையில் விளக்கியதோடு, பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, பாரதி, பாரதிதாசன் முதலிய பலர் தமிழ் பற்றிப் பாடியுள்ள எழுச்சிக் கவிதைகளை உணர்ச்சியுடன் எடுத்துரைத்தார். இதன்மூலம் மாணவர்களின் ஒருமுகப் பாராட்டினைப் பெற்றார்.

14—9—69 ஞாயிறன்று மாலை 6-30 மணிக்கு சரஸ்வதிவித்தியாலயாவில் வள்ளுவர் 2000 ஆண்டு விழா மாணவர் தலைவர் திரு. என். வி. ஆர். ஐயர் தலைமையில் நடைபெற்றது. திரு மு பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் "வான் புகழ் வள்ளுவர்" என்னும் தலைப்பில் வந்திருந்தோர் அனைவரும் பாராட்டும் உரை நிகழ்த்தினார் எக்காலத்தார்க்கும் எச்சமயத்தார்க்கும் எந்நாட்டவர்க்கும் பொருந்தும் வகையில் தெய்வப்புலவர் வழங்கிய திருக்குறள் எங்ஙனம் திகழ்கிறது என்பதையும், மருதத்திணையில் பரத்தையர் பற்றிப் பாடிக்கொண்டிருந்த சங்ககாலத் தமிழகத்தில் பொதுமகளிரைச்சாடிய புரட்சிக்கவிஞராய்கள் ளுண்ணுதலைக் கண்டித்துப் பாடிய எழுச்சிக்கவிஞராய்இலக்கிய

(14-ம் பக்கம் பார்க்க)

# தம்பி

வெட்டுண்டு வீழ்கின்றனர், தூக்குமேடைக்கு இழுத்துச் செல்லப்படுகின்றனர்! பதுங்க [illegible] றனர். பிடிபட்டுப் பதறப்பதறச் சுட்டுக் கொல்லப்படுகின்றனர்! ஆற்றல், ஆட [illegible] உடைமை அல்ல என்று முழக்கமிட்டுக்கொண்டு ஆரணங்குகள் கிளம்புகின்றன [illegible] ஆனால் [illegible]? தளை உண்டு, சிறை உண்டு என்று ஆட்சியினர் [illegible] இதனிடம் நியாயம் கிடைக்காது, அறிவோம் என்று [illegible] பாணிக்கங்கள். சதி! பயங்கரத் திட்டம்! கொலை! [illegible] தரும கொடுமைகள்!! — என்றெல்லாம் இதழ்களில், கொட்டை எழுத்துக்களில் வெளிவருகின்றன!

முப்படையும் மும்முரமாகிறது. வீரரோ, காடுகளைக் களமாக்கிக்கொள்கின்றனர், மலைச் சாவுகளை மன்றங்களாக்கிக்கொள்கின்றனர், பாசறைகள், அடர்ந்த அடவிகளிலே எழுகின்றன! இங்கு! அங்கு!—என்று அதிகாரிகள் கூறித் தேடுகின்றனர். ஓரிடம் சென்றால் புரட்சிப் படையினர் மற்றோரிடம் சென்றுவிடுகின்றனர்! மாயாவிகள்! மாபாவிகள்! — என்று கடிந்துரைக்கின்றனர் ஆட்சியாளர்! எமது தாயகத்தை விடுவிக்கும் தங்கக் கம்பிகள்! அறிவுடை நம்பிகள்! அடலேறுகள்! என்று வாழ்த்துகின்றனர், நாட்டு விடுதலையில் நாட்டம் கொண்டோர்.

மலையும் வனமும், மனையும் தொழிலிடமும், அங்காடியும் அடுக்களையும், பூங்காவும்—எல்லாம் வீரக் கோட்டமாகிவிடுகின்றன!

பரலோகம் குறித்த பஜனை நடைபெறும் இடங்கள் மட்டும் என்ன? அங்கும், விடுதலை பற்றியே உபன்யாசம்!

சைப்ரஸ் தீவு தம்பி! நான் மேலே, காட்டியுள்ள இடம்!! படை வரிசையினர் மட்டுமல்ல, பள்ளிச் சிறுவர் மட்டுமல்ல, பாதிரிமார்களும் பங்குகொள்ளும், உரிமைக் கிளர்ச்சி வேகத்துடனும் விறுவிறுப்புடனும் நடக்கு [illegible] ஸ் தீவு.

பிரிட்டிஷ் பிடியில் இனியும் இருந்திட [illegible], கிரீஸ் நாட்டுடன் இணைந்து வாழ்ந்திட [illegible] கள். பிரிட்டிஷ் [illegible] படையைக் காட்டி எமது பிறப்புரிமையை அழித்திட முனையாதீர் [illegible] என்று சைப்ரஸ் தீவிலே [illegible] யுள்ள உரிமையைப் போரிட்டுப் பெறுவோம் [illegible]

வேண்டுகோள் கவனிக்கப்படவில்லை—கெஞ்சினர், மிஞ்சினர்—எனவே, [illegible] முறைகள், பயங்கரச் செயல்கள் கிளம்பின; அந்தப் போக்கை ஒடுக்க, பிரிட்டன் அடக்கு முறையை அவிழ்த்துவிட்டது. ஐயகோ! தம்பி, அடக்குமுறை, வயிறு வெடிக்குமளவு [illegible] சைப்ரஸ் நாட்டு விடுதலை வீரரின் குருதியைக் குடிக்கிறது.

கடைசிச் சந்தர்ப்பம்! இறுதி யுத்தம்! [illegible], என்றென்றும் எனை மறவாதே!—

# விழாவும்-விளக்கமும்



என்று கூறிவிட்டுச் செல்வான் காதலன். மறுநாள் இராணுவத்தினர் விதித்திடும் மரண தண்டனையை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வான்—மலர் கருகும்—மனையில் ஓலம் பீறிட்டெழும்—மக்கள் கண்ணீர் பொழிவர்—புதிய வேட்டைக்குத் தன்னைத் தயாரித்துக் கொண்டு, அடக்குமுறை கிளம்பும்.

இந்தச் சைப்ரஸ் தீவில், கனலை மூட்டிவிட்டவர், கலகத்தைத் தூண்டிவிட்டவர், சதிச் செயல்களுக்குத் தூபமிட்டவர், பயங்கரவாதிகளுடன் தொடர்புகொண்டவர் என்றெல்லாம், குற்றம் சாட்டப்பட்ட மகாரியாஸ் பாதிரியாரை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், சிறைப்படுத்திற்று.

கர்த்தரின் நாமத்தைப் பஜிக்கவேண்டிய வாயால்' கலகமூட்டிப் பேசினுர், ஜெபமாலை உருட்ட வேண்டிய கரங்களில் பயங்கரக் கருவிகளை ஏந்தினுர், பரலோக மகத்துவத்தைக் குறித்துப் போதிக்க வேண்டியவர் புரட்சியை ஊட்டிடப் பேசினுர், பாதிரி அல்ல இவர், பயங்கரவாதி! இவரிடம் ஒப்படைக்கப்பட்ட ஆலயத்தை இவர் ஆயுதக் கிடங்கு ஆக்கிவிட்டார்—ஆபத்தானவர்!! — என்றெல்லாம், மகாரியாஸ் மீது பிரிட்டிஷார், கண்டனம் வீசினர் — ஷீஷலீஸ் தீவு கொண்டுசென்று, சிறைப்படுத்தி வைத்தனர்.

நெடுந் தொலைவிலே தாயகம்—அங்கு குன்றிலும் பொழிலிலும், காடு கழனியிலும், வீரர் முழக்கம் கேட்ட படி இருக்கிறது—முதியவர் இந்தப் பாதிரியார், சிறை வைக்கப்பட்ட தீவிலிருந்துகொண்டே, மனக் கண்ணுல் விடுதலைக் கிளர்ச்சியின் வடிவத்தைக் கண்டு களி கொண்டார்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வெறிக்கு, இஃதோர் எடுத்துக்காட்டு—அதற்காகத்தான் அண்ணு, இதனைக் காட்டுகிருர் என்று கூறுகிருய், தம்பி!

விடுதலை வேட்கை கொண்டவருக்கு, வந்துற்றிடும் இடுக்கண்கள் எண்ணற்றவகையின, என்பதை விளக்கிட, இதனைக் கூறுகிறேன் என்று கருதும் தம்பிகளையும் காண்கிறேன்.

நாடு நலிந்தால் நமக்கென்ன, நாமாவளி பாடிடத் தானே நாம் இருக்கிறேம்—என்ற போக்கிலே ஆண்டிகளும் இருந்திடலாகாது, சைப்ரஸ் தீவில் விடுதலைக்கான கிளர்ச்சியிலே, ஒரு பாதிரியார் எத்தகைய தீவிரத்துடன் ஈடுபட்டு, எத்துணை இன்னலை ஏற்றுக் கொண்டார், காணீர் என்று இந்நாட்டு, காவிக் கோமான்களுக்குக் காட்ட, இதனை நான் எடுத்துரைக்கிறேன், என்று எண்ணும் தம்பிமார்களும் இருக்கிருர்கள்.

நான், இந்தக் கருத்துகளுக்காக மட்டுமல்ல, இதனைக் கூறி இருப்பது.

பயங்கரப் பலாத்காரமும், அதை ஒடுக்க என்று கூறிக்கொண்டு மோசமான அடக்கு முறையையும் வீசும் நிலையில் உள்ள சைப்ரஸ் தீவில், பயங்கர வாதிகளுடன் தொடர்புகொண்டவர், நடத்திச் செல்பவர் என்று கருதப்பட்டுச் சிறைப்படுத்தப்பட்டவராயிற்றே, மகாரியாஸ் பாதிரியார், அவர் சென்ற கிழமை விடுதலை பெற்றிருக்கிருர்!! சைப்ரசில் மட்டுமல்ல, கிரேக்கநாடு முழுவதுமே, விழாப்போன்ற நிலைமை! உலகெங்கும் உயர்ந்த எண்ணம் படைத்தோரிடமிருந்தெல்லாம் வாழ்த்துகள்! அமெரிக்க மக்கள், தங்களைக்காண விழைகின்றனர், வருக! வருக! என்று அழைப்பு!! மகாரியாஸ் பாதிரியார் கிரேக்க மன்னர் அவை செல்கிருர், விருது அளிக்கிருர் பால் மன்னர்!

தம்பி! மறந்துவிடாதே, வெடிகுண்டு வீசி விடுதலைக் கிளர்ச்சி நடத்தும் இடம், சைப்ரஸ்! வெட்டி வீழ்த்தியும், சுட்டுத்தள்ளியும் விடுதலை வீரர்களை ஒழித்திட, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் முனைந்துள்ள இடம், சைப்ரஸ்!!

எனினும், மகாரியாஸ் பாதிரியாரை, விடுதலை செய்திருக்கிறது, பிரிட்டன்.

சைப்ரசில் பேயாட்சி நடத்தும் பிரிட்டன், மகாரியாஸ் பாதிரியாரை விடுதலை செய்திருக்கிறது.

அதேபோது, சாந்தமும் சன்மார்க்கமும், சீலமும் அகிம்சையும், பேச்சாகவும், மூச்சாகவும் கொண்டு இயங்குகிறதே, 'பாரதம்'—இங்கு, காஷ்மீர் முன்னுள் முதலமைச்சர் ஷேக் அப்துல்லாவை, மேலும் சில காலம், சிறையிலேயே வைத்திருக்க, 'தாக்கீது' பிறந்திருக்கிறது!!

காஷ்மீரில், பொதுத்தேர்தல் நடைபெற்றிருக்கிறது—அதற்கான அமைதியான சூழ்நிலை கிடைத்திருக்கிறது—எனினும், பீரங்கி முழக்கமிடும் தீவின் பயங்கர மனிதர் என்று சித்தரிக்கப்பட்ட, பாதிரியார் விடுதலை செய்யப்படுகிருர்—என்ன செய்தார் என்பதுபற்றி வழக்கும் தொடராமல், இவர் வெளியே உலவுவது காஷ்மீரத்து நிலைமையை அபாயத்துக்கு உள்ளாக்கும் என்று கூறிவிட்டு, சிறையிலே தள்ளினரே, ஷேக் அப்துல்லாவை, அவருடைய சிறைவாசம் மேலும் சில காலத்துக்கு நீடிக்கப்பட்டிருக்கிறது!!

ஜெய்ஹிந்த்-சொல்லச் சொல்லிச் சொல்கிறீர்களா?—அல்லது வந்தே மாதரம் பாடுவமா — அல்லது கோஷ்டியாகக்கூடி, ஜனகணமன பாடுவதா, என்று கேளுங்கள் காங்கிரஸ் நண்பர்களை!

பிரிட்டிஷ் பேயாட்சியில் பயங்கர மனிதர் விடுதலை பெறுகிறபோது, நேருவின் மாஜி நண்பர், வெளியே விடப்பட்டால், எங்கோ அவர் ஒளித்து வைத்திருக்கும் அணுகுண்டை எடுத்து அலகாபாத் தாரின் அரண்கள் மீது வீசி, அழிவு உண்டாக்கு வார், என்று அஞ்சுகிருர்கள்!

மகாரியாஸ் பாதிரியார் விடுதலை—ஷேக் அப்துல்லாவின் சிறைவாசம் நீடிப்பு!—இந்த இரு செய்திகளையும், ஒருசேர எண்ணிப் பார்த்திடும்போது என்ன தோன்றுகிறது — உனக்கல்ல — அவர்களுக்கு — காங்கிரஸ் அன்பர்கட்கு.

வீட்டுக்கொரு வீரன் வேண்டும்! வெற்றி அல்லது வீர மரணம், என்ற இலட்சியம் ததும்பும் இதயம் படைத்தோர், திரண்டு எழல் வேண்டும்! இனியும், வாளா இருப்பின் வையகம் நம்மைக் கேலியால் கொல்லும்! நேரடிக் கிளர்ச்சியில், ஈடுபட வாரீர், வாரீர்!—என்று இலங்கைத்தீவிலே உள்ள தமிழர் தலைவர்கள் முழக்கமிடுகின்றனர். எண்ணற்ற இளைஞர்கள், நான் நீ—என்று போட்டியிட்டுக்கொண்டு அறப் போரில் ஈடுபட முன்வருகின்றனர்.

"இலங்கையிலே எங்கு பார்த்தாலும், வானளாவும் நீல மலைகளின் உச்சி எல்லாம் பசுமை நிறைந்த தேயிலைச் செடிகள், இரப்பர் காடுகள். இவை தோன்றக் காரணமாயிருந்தவன் மலைநாட்டுத் தமிழன்.

மண்ணைப் பொன்னுக்கிக் குவித்து, நாட்டின் வளத்தைப் பெருக்கி சுபீட்சத்தையும் பெற்றுவாழ வழி வகுத்த தென்னுட்டு மக்களின் உரிமையையும், அந்தஸ்த்தையும் பறித்து, அடிமைகளாக இலங்கை வைத்திருக்கிறது, பல இலட்சம் தமிழ் மக்களின இரதத வியர்வையைக்கொண்டு உருவாக்கபபட்டிருக்கும் இந்த இலங்கை நாட்டில், தமிழ்

மக்கள் இன்று அந்த நாட்டிலே அடிமைகளாக, அநாதைத்களாக நாடற்றவர்களாக, நசுக்கப்பட்டு வருகிறார்கள்"—என்று சென்றகிழமை நமது டி. கே. சீனிவாசன், கொழும்பு நகரத்தில் நாராயண குரு மண்டபத்தில், தி. மு. க ஆதரவில் நடைபெற்ற கூட்டத்தில் பேசி இருக்கிறார்.

இந்த இலங்கைக்கு, நேரு பண்டிதர். மே திங்களில், செல்கிறார்!!

தமிழரின் துயர் துடைக்க! உரிமைக்காக வாதாட! பண்டார நாயகா சர்க்காரின் படுமோசத் திட்டத்தை ஒழித்திட! என்றெல்லாம், காங்கிரஸ் நண்பர்கள், எண்ணிக்கொள்ளப் போகிறார்கள்—தமிழர் தத்தளிக்கின்றனர்—ஆனால் நேரு பண்டிதர் 'விஜயம்' செய்வது அவர்தம் பிரச்சினை குறித்துப் பேச அல்ல—பகவான் புத்தருடைய ஜெயந்தியில் கலந்து கொள்ளும்படி, பண்டார நாயகா சர்க்கார் விடுத்துள்ள அழைப்பினை ஏற்றுக்கொண்டு செல்ல இருக்கிறார். பஞ்சையாய், பராரியாய், பாட்டாளியாய், கிடந்து உழலும், இந்தத் தமிழர்களுக்குப் பணிபுரிவதா, பார்புகழ் பண்டிதருக்கு இருக்கும் வேலை! அவர் புத்தர் விழாவில், பிரசன்னமாகி, சீலம், சாந்தம், சன்மார்க்கம்,—சமரசம்—சத்காரியம், எனும் பொருள்பற்றி எல்லாம் பேசப்போகிறார்! என்னே, நேருவின் அறிவாற்றல்! — என்று ஏடுகள் எழுதப்போகின்றன! ஜனசமுத்திரம் காணீர், என்று இதழ்கள் படங்களை வெளியிடப்போகின்றன!!

உலகில் சாந்தியும் சமாதானமும் நிலவ, பஞ்சசீலம் போதித்து வரும், பாரதப் பிரதமரே வருக! வருக!!—என்று பண்டார நாயகா வரவேற்புரை கூறுவார்—அதே போது, இலங்கையில் வேறேதாவதோரிடத்தில், "ஏ! கள்ளத் தோணி! கட்டு மூட்டையை! சட்டமாவது! திட்டமாவது! ஓடுகிறாயா, நாட்டைவிட்டு, இல்லையானால் குத்திக் கொல்லட்டுமா என்று வெறியன் எவனாவது கொக்கரித்துக் கொண்டிருப்பான்.

அழாதே, தமிழா! அழாதே!! ஆயாசப்படாதே அன்பனே! உன் நாட்டின் அருமை பெருமை எப்படிப் பட்டது என்பதைப் பார்! இதோ உனக்கென்று, நீயாகத் தேடிப் பெற்றுக்கொண்ட முடிசூடா மன்னர் இருக்கிறாரே, நேரு பண்டிதர், அவருக்கு நடத்தப்படும் இராஜோபசாரத்தைப் பார்! அவர் முன்நின்று, வணங்கியும் வாழ்த்தியும், கைகுலுக்கியும் கனிவுரை பொழிந்தும் நிற்பவர்கள், சாமான்யர்கள் அல்ல-பண்டார நாயகாக்கள்—சேனநாயகர்கள்—கொத்தலாவலைகள் கோடீஸ்வரர்கள்!! அவர்கள் சுட்டுவிரலிலே சட்டம் இருக்கிறது! அவர்களிடம் நாடு இருக்கிறது! அப்படிப்பட்ட பெரிய தலைவர்கள் மெத்தப் பய பக்தியுடன், உன் பண்டிதர் முன்நின்று, பணிவிடை செய்வதைப் பாராய்—என்று சொன்னால்—எப்படி இருக்கும் கண்ணீர் கொப்பளிக்கும் நிலையில் உள்ள, நம் உடன் பிறந்தார்க்கு!!

வெட்டுக் காயத்தில், அரைத்தெடுத்த மிளகாயை அப்பி வைத்து, உலைக் கூடத்திலே இருக்கச் செய்து விட்டு "பாக்யவானடா நீ! உனை ஆளும் வேந்தன், வெண்ணெயால் பல்விளக்கி பன்னீரால் வாய்கொப்பளித்து சுத்தம் செய்த பிறகுதான், தங்கக் கோப்பையில் கனிரசம் ஊற்றிப்பருகுவாராமே என்று சொன்னால் அவனுக்கு எப்படி இருக்கும், அதே நிலைதான் அவமானமும் தமிழருக்கு—ஆனந்த வைபவமும் அரசாங்க மரியாதையும் நேரு பண்டிதருக்கு. கண்ணால் பாரும் ஏமது புண்களை—என்று கூறத் தமிழர் துடிப்பர்—காதால் கேளும் என் பஞ்சசீல உபதேசத்தை என்று மட்டுமே பண்டிதர் கூறிட நினைப்பார்.

விசித்திரம் இதுமட்டுந்தானா?

பூசல்கள் கூடாது—சமரசமாகவே, எந்தத் தகராறுகளையும் தீர்த்துக்கொள்ள வேண்டும் — அன்புதான் அடிப்படையாக இருக்கவேண்டும், பலாத்காரம் அறவே இருத்தல் கூடாது!!—என்றெல்லாம் கேட்போர், சாந்த சீலர்களாகும் விதமாகப் பண்டிதர் பேச இருக்கிறார், ஜெயந்தியில்—அவருடைய 'பாரதத்தில்' நாக நாட்டவர் உரிமைக் கிளர்ச்சியை நீண்ட காலமாகவே நடத்திக்கொண்டு வருகிறார்கள் — அந்த மக்களுக்குச் சீலம் போதிக்க, நேரு பண்டிதரின் ஆட்சி

லெப்—ஜெனரல் திம்மய்யா

லெப்—ஜெனரல் தொராட்

மேஜர்—ஜெனரல் கோச்சார்

கர்னல் பிரேஸ்வர்நாத்

ஆகியோர் கொண்ட ஒரு ஆலோசனைக் கூட்டம் நடத்திற்று.

திம்மய்யாவும் தொராட்டும் படைகளை நாலாபக்கமும் அனுப்பி, நாகர்களை, கலகத்தினின்றும் விடுவிக்கிறார்கள்!! எப்படி? சுட்டுத் தள்ளுவதன் மூலம்!!

பாருக்கெல்லாம் பஞ்சீலம்; பாரதத்தில்? பட்டாளத்துப் பெருந்தலைவர்களிடம், நாகநாடு பிரச்சினை பெரிதும் ஒப்படைக்கப்படுகிறது. நாள் தவறாமல், நாகர்கள் பிடிபட்டனர், சுடப்பட்டனர், விரட்டப்பட்டனர், என்ற 'செய்தி'கள் தரப்பட்டு வருகின்றனவே

குருதி கொட்டியா, பிரச்சினையைத் தீர்ப்பது, அன்பு நெறி மூலம், அகில உலகிலும் அமளி எழாமற் செய்ய இயலுமே. அண்ணல் காந்தி அதனைத்தானே அவனிக்கே அறிவித்தார்—என்று பாரதப் பிரதமர் அடுத்த திங்களில் பேசப் போகிறார்! இப்போது, நாகநாடு பிரச்சினையில் அவருடைய 'இராணுவம்' மும்முரமாக ஈடுபட்டிருக்கிறது!!

இப்படி எண்ணற்ற விசித்திரங்கள், 'பாரதத்தில்' உள்ளன. ஆனால், சில அரசியல்வாதிகளுக்கு இவைகளெல்லாம், விசித்திரங்களாகத் தோன்றவில்லை—தம்பி! அவர்கள் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகம் பெற்ற, (மிகச் சிறிய அளவினதான) வெற்றியை, விசித்திரமானது என்று கருதுகிறார்கள்.

இலங்கைத் தமிழர்களின் எதிர்காலம் என்ன?

காஷ்மீர் சிக்கல் இன்னமும் எத்தனை எத்தனை கோடிகளைத்தான் விழுங்கும்?

கோவாவில் நடைபெறும் அன்னிய ஆட்சியை நீக்கிட நேரு பண்டிதரால் ஏன் இன்னமும் இயலவில்லை?

என்பன போன்ற பிரச்சினைகளைக் கூட, அலச, ஆராய, நேரமோ, நினைப்போ இல்லை. அவர்கள் கண் முன் இப்போது தெரிவதெல்லாம், 15!!

ஆமாம்! பதினைந்து!! கழகம் பெற்ற வெற்றி பற்றிய எண்ணம்தான் குத்துகிறது, குடைகிறது!

எப்படிப் பெற்றார்கள்? என்று கேட்டுக் கேட்டு, ஏதேதோ காரணம் கட்டிப் பார்த்து மகிழ்ந்தாகி விட்டது—இப்போது அவர்கள், இந்தப் பதினைந்து பேர் என்ன செய்யப் போகிறார்கள்? என்று கேட்கின்றனர்—அது குறித்தே தத்தமது தரத்துக்குத் தக்க வண்ணம் உரையாடித் திரிகின்றனர்.

திராவிட கழகத்தார் பரவாயில்லை, அவர்களுக்கு, புத்தம் புதிய வேலை கிடைத்துவிட்டது—அதிலே மும்

**அடுத்த இதழில்**

**அறிஞர் அண்ணா**
அவர்களின்

## ஆலிங்கனமும்-அழிவும்!

**என்ற தம்பிக்கு மடல் இடம்பெறும்.**

முரமாக ஈடுபட்டு விடுவர்—இடையிடையே, இப்படியும் அப்படியுமாகக் குத்துவர்—ஆனால் அவர்களின் முழு ஆற்றலும், இப்போது, களத்துக்குத் திரட்டப்பட்டு வருகிறது!!

இனிச் சிலகாலம், காரசாரம், வீரதீரம், சூடு சூளுரைத்தல், இவைகளை, புதிய போராட்டங்களுக் பயன்படுத்திக் கொண்டிருக்க வேண்டும்.

அணுகுண்டுகளை எல்லாம் ஆழ்கடலுக்குள் போட்டுவிட்டதாக அமெரிக்கா அறிவித்தாலும் சரி, அவர்கள் அக்கறை காட்டவும் மாட்டார்கள். அக்கறை காட்டிட யார் முனைந்தாலும், "அற்பனே! அதுவா இப்போதைய முக்கியமான பிரச்சினை!! இதோ, பார், இது பிரச்சினை—இதோ, இது, இது!!" என்று கூறுவர்; மறுப்பவன் மீதோ, நாராச பாணங்கள் சரமாரியாக விடுப்பர்.

ஆனால், தீவிரமாக, தீரப்போரில் ஈடுபட்டிருக்கும் வேளையிலும், "இந்தப் பயல்கள்...கண்ணீர்த் துளிகள்......" என்ற அந்த அர்ச்சனையையும், கூறுமலிரார். ஆனால், தம்பி! போர்க்கோலம் பூண்டு நிற்கும்போது, அவர்கள் மிகச் சாமான்யமான காரியமான அரசியல் பிரச்சினையை அணுகும் நம்மைப் பற்றிப் பேசினால், நாம் கவலைப்பட்டு என்ன பயன்!!

வாகை சூடுக!! என்று நாம், மனதார அவர்களுக்குக் கூறிட விழைகிறோம்.

அவர்கள்போல, போர்க்கோலம் பூண்டுள்ளவர்கள் அல்ல, மிகச் சாமான்யமான அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள நம் போன்றவர்கள் இருக்கிறார்களே, அவர்கள், இந்தப் பதினைந்து பேர் சட்டசபையில், போய் இருந்துகொண்டு என்ன சாதிக்கப் போகிறார்கள்? என்ன செய்ய முடியும்? என்ன திறமை இருக்கிறது!—என்றெல்லாம் பேசுகிறார்களே, அவர்களைக் குறித்து நாம் யோசிக்க வேண்டும்.

அதற்கு முன்னதாக, ஏன், பதினைந்து பேர் பெற்ற வெற்றியை விசித்திரம் என்று கருதுகிறார்கள் என்பது பற்றி எண்ணிப் பார்த்தாயா, தம்பி.

நான் அது குறித்து எண்ணிப் பார்த்தேன்—அவர்கள் அவ்விதம் எண்ணுவதற்குக் காரணம் யார், தெரியுமா? நீதான் தம்பி! நீயே, தான்!! நாள் தவறாமல் ஊர்தோறும், பெருந்திரளான மக்களைக் கூட்டச் செய்து, விழாக் கோலம் காட்டி, நடத்திய வண்ணம் இருக்கிறாயே வெற்றிக் கூட்டங்கள்—வரவேற்பு விழாக்கள்—பாராட்டுக் கூட்டங்கள்—இவைகளைக் காணக் காணத்தான், அவர்களுக்கு, கோபம் கோபமாக வருகிறது—வெற்றியாம் விழாவாம்! வெற்றி பெற்றவர்கள் என்ன சாதிக்கப் போகிறார்களாம் சட்டசபையில் என்று கோபமாகக் கேட்கின்றனர். நமது பேரில் அவர்களுக்குக் கிளம்பும் கோபத்தில், அவர்கள்

காஷ்மீர் பிரச்சினை என்ன ஆகும்?

கோவா கொடுமை எப்போது ஒழியும்?

இலங்கைத் தமிழரின் எதிர்காலம் என்ன?

என்பன போன்றவைகளைக் கூடக் கவனிக்க மறந்து விடுகிறார்கள். இந்தப் பிரச்சினைகளுக்கு அடிப்படையாக அமைந்துள்ள நேரு பண்டிதரின் ஆட்சியிலே காணக் கிடக்கும் விசித்திரங்களைக் கூட மறந்து போகின்றனர்.

உள்ளபடி, சென்ற கிழமை திருச்சியிலே, நமது தோழர்கள் நடத்திய பாராட்டுக் கூட்டத்தைக் கண்டவர்கள், காய்ந்து விழாமல் எப்படி இருந்திட முடியும்? நான் அந்தக் கூட்டத்திலேயே நிலைமையை எடுத்துரைத்தேன்.

"நீங்கள் மெத்தப் பொல்லாதவர்கள்"

என்றுதான் குறைசொல்ல வேண்டும். பெற்றது 15 தான் என்றாலும் 1500 இடங்களைப் பிடித்ததைப் போல இப்படி மலர் மாலைகளையும் கைத்தறி ஆடைகளையும் குவிக்கின்றீர்கள், ஏன்தான் நீங்கள் இப்படிச் செய்கின்றீர்களோ? நீங்கள் இப்படிச் செய்வதின் பலன் எங்கள் தலையில் வந்து விழுகின்றது.

நாளைக்கோ மறுநாளோ கூடிக் கூடி காங்கிரஸ்காரர்கள் பேசப் போகின்றார்கள்; முறைத்து முறைத்துக் கம்யூனிஸ்டுகள் ஏசப் போகிறார்கள்—திரும்பிப் பார்த்து விட்டுப் பார்த்துவிட்டுத் திராவிடர் கழகத்தவர்கள் தீப்பொறி பறக்கப் பேசப் போகிறார்கள்—என்ன இந்தப் பயல்களுக்கு இவ்வளவு கருவம்—என்ன இந்தக் கருணாநிதிக்கு இவ்வளவு பெரிய மாலை, அண்ணாத்துரைக்கு என்ன அவ்வளவு பெரிய மாலை! இதற்கு ஒரு போட்டோ, 150 இடங்களைப் பிடித்தார்களே அவர்கள் இப்படியா ஆடினார்கள்—என்று.

நீங்கள் மெத்தப் பொல்லாதவர்கள். கொடுத்த வெற்றி குறைவுதான் என்றாலும் அதற்காக நீங்கள் நடத்துகின்ற கொண்டாட்டம் மிக அதிகம், ஆனால் உண்மையிலேயே நீங்கள் பொல்லாதவர்களா என்றால் உண்மையிலே பொல்லாதவர்கள் என்று பிறர் சொல்வார்களே தவிர, நீங்கள் நல்லவர்கள்.

இந்தக் கூட்டத்திற்கு வருகிற நேரத்திலே இந்த நகரத்து மக்கள் சிறு சிறு சோற்று மூட்டைகளைக் கட்டிக்கொண்டு ஆடவனும் அவனுக்குச் சொந்தமான அணங்கும், அவர்கள் பெற்றெடுத்த பொற்கொடிகளும் செல்வங்களும் வரிசையாகச் செல்லக் கண்டேன்; நல்ல நிலவு ஆற்றோரத்திற்குச் செல்லுகிறார்கள். அருமையாகச் சமைத்த பண்டத்தைச் சாப்பிடப் போகிறார்கள். அந்தச் சோற்றில் ஒரு சமயம் உப்பு குறைவாக இருக்கக்கூடும்; பண்டம் வேகாமல் கூட இருக்கலாம். ஆனால் அதை அன்போடு பிசைந்து தந்த ஆரணங்கு உப்பில்லாப் பண்டத்தை உப்புள்ளதாக்குகிறாள். வேகாததை வெந்ததாக்குகின்றாள்—கையிலே வாங்கி உண்ணுகின்ற நேரத்தில் உப்பு இல்லை என்று அவன் சொல்லுகின்றான்—அவள் சரியாகச் சாப்பிட்டுப் பாருங்கள் என்று சொல்லவேண்டிய முறைப்படி சொல்கிறாள்—பிறகு உப்பு இருப்பதுபோல அவனுக்குத் தோன்றுகிறது. அப்பொழுது அவளுடைய கன்னத்திலே இடித்துச் சொல்லுகிறான் 'நீ மிகப் பொல்லாதவள்' என்று! அந்த வகையிலே நீங்கள் பொல்லாதவர்கள்! என்று சொன்னேன்.

உள்ளே செல்பவர்கள் 15 பேர்! ஆளும் கட்சியிலோ, பத்து மடங்கு!! நமக்குத் துணையாக, உள்ளத் தூய்மையும் கடமை உணர்ச்சியும்! நமக்கு விறுவிறுப்பும் சுறுசுறுப்பும் தர, நம்மை நாசம் செய்வதாக எண்ணிக்கொள்வோர் தரும், தூற்றல், துளைத்தல், குத்தல், இன்ன பிற!!

இதை எண்ணினேன்— ஆமாம், நம்மை உள்ளே அனுப்பிவிட்டு, கழகத் தோழர்கள், இனி நாம் செய்ய வேண்டியது ஏதுமில்லை. என்று எண்ணிக்கொண்டால், நிலைமை என்ன ஆவது என்ற எண்ணம் பிறந்தது— ஒரு விநாடி திகிலேகூட ஏற்பட்டது; அன்று அங்கு, என் எண்ணத்தைக் கூறினேனே கூட்டத்தில், அதைத் தம்பி! இப்போதும், நினைவிற்குக் கொண்டு வருகிறேன்.

“நீங்கள் எங்களை உள்ளே அனுப்பிவிட்டு வெளியிலே கழகத்தை நல்ல முறையிலே வளர்க்காவிட்டால், நடுக்காட்டில் கையிலே நல்ல ஒரு தங்க நகையைக் கொடுத்து ஒரு இளம் பெண்ணைக் காட்டுக்குள்ளே, துரத்திவிட்டு விட்டால் அது எவ்வளவு கொடுமையான காரியமோ, அப்படிப்பட்ட காரியமாக முடியும். எங்களை உள்ளே அனுப்பிவிட்டு வெளியிலே நீங்கள் பணியாற்றாமலிருந்தால், தங்க நகை கையிலே தையல் நடந்து செல்லுகின்றாள் தன்னந் தனியாக— எதிர்ப்பட்டோர் நகையையும் பறித்துக் கொள்ளக் கூடும்—நகை போனாலும் பரவாயில்லை—செல்லுகின்றவள் தையல். ஆகையினால்தான் நாங்கள் அங்கே வேறு காரியம் ஆற்றமுடியாமல் போய்விட்டாலும் பரவாயில்லை, நாங்கள் சீர்குலைக்கப்படாமல் இருக்க வேண்டுமானால் வெளியிலே இருக்கும் நீங்கள் உண்மையிலே கழகத்தை வலிவோடு காப்பாற்ற வேண்டும்.

நான் தையலை உதாரணம் சொல்லி அரசியலை நினைவூட்டியதற்குக் காரணம், அரசியலில் அப்படிச் சீர்குலைக்கப்பட்டவர்கள் பலர். இராமசாமி (படையாச்சி) தலைசிறந்த உதாரணம் மாணிக்கவேலர் மற்றோர் உதாரணம்—எத்தனையோ பேர் வீராவேசத்தோடு உள்ளே போனார்கள்—வெளியிலே அவர்களைத் தட்டிக் கேட்க ஆளில்லை—ஆகவே நகையைக் கையிலே வைத்திருந்த தையல் காட்டிலே சிக்கி நகையையும் இழந்து அவளும் என்ன ஆனாளோ என்று ஊரார் எல்லாம் பேசுகின்ற விதத்தில், மாணிக்கவேலரும் இராமசாமிப் படையாச்சியும் சீர்குலைக்கப்பட்டார்கள். அப்படிப்பட்ட அரசியல் சீர்குலைவு எங்களில் யாருக்கும் ஏற்படாமல் இருக்கவேண்டுமானால். நீங்கள் வெளியிலே இருக்கிற கோட்டையைத் திறம்பட கட்டிக் காப்பாற்ற வேண்டும். அங்கிருந்து நீங்கள் கொடுக்கின்ற குரல் நாங்கள் கொஞ்சம் ஓய்வாக இருந்தால் எங்கள் காதிலே நுழைந்து நெஞ்சத்தைத் தட்ட வேண்டும். அங்கிருந்து நீங்கள் பிறப்பிக்கின்ற கட்டளை எங்களைச் சட்டசபையிலே பணியாற்றுகின்ற அளவுக்கு உற்சாகத்தைத் தரவேண்டும். அதேபோல் எங்களை உள்ளே இருப்பவர்கள் அலட்சியப்படுத்தினால், 15-பேர்தானே நீங்கள் நாங்கள் 150 பேர் என்று அவர்கள் சொன்னால் அங்கே நாங்கள் அதிகம் பேசமாட்டோம். ஒரு சமயம் நான் இல்லாவிட்டால்கூட, நம்முடைய தம்பிமார்கள் அதிகம் பேசுவார்கள். நான் இருக்கின்ற காரணத்தினாலே— அவர்களுக்கு இன்னின்னது பேசவேண்டும் என்று தோன்றும்—வேண்டாம் வேண்டாம் என்று நான் தடுப்பேன்.” அவர்களையும் அழைத்துக்கொண்டு மறுபடியும் நான் உங்களிடத்திலேதான் வருவேன்.

என்று எடுத்துக் கூறினேன் — இதில் என்ன அண்ணா! சந்தேகம்!; இந்தப் பதினைந்து போதும் என்றும் நாங்கள் கருதிக் கொண்டில்லை, சட்டசபையில் அமர்ந்துவிட்டாலே சகல காரியமும் நடைபெற்று விடும் என்றும் நாங்கள் தப்புக் கணக்குப் போடவில்லை, உங்களை உள்ளே அனுப்பிவிட்டதோடு எங்கள் வேலை முடிந்துவிட்டது என்றும் எண்ணிக் கொண்டில்லை; நாங்கள். இதுவரை பணியாற்றியதில் கிடைத்தவை—

ஆயிரத்துக்கு மேற்பட்ட கிளைக் கழகங்கள்,

இலட்சத்துக்கு மேற்பட்ட கழக அன்பர்கள்

சென்னையில், அறிவகம், அழகிரி அச்சகம், திடல், நம்நாடு.

பல ஊர்களிலே கழகத்துக்குச் சொந்தமான இடங்கள் என்று பட்டியல் தயாரிக்கிறோமே பூரிப்புடன், அதிலே, புதிதாக உற்சாகத்துடன்,

பதினைந்து சட்டசபை உறுப்பினர்கள்

இரண்டு பாராளு மன்ற உறுப்பினர்கள்

என்று சேர்த்து மகிழ்கிறோம்; அந்த மகிழ்ச்சி எம்மை, மேலும் மேலும் நம்பிக்கையுடன் கழகப் பணியாற்றிடத் தூண்டுமே தவிர, படுத்து உறங்கவா வைத்துவிடும்? உனக்கேன் அப்படி ஒரு அச்சம் ஏற்பட்டது? என்று என்னைப் பார்த்துக் கேட்பது போலிருந்தது, திருச்சியில் தோழர்கள் காட்டிய மகிழ்ச்சி முழக்கம்!!

எனக்கு, தம்பி, இந்தக் குறிகள் எல்லாவற்றையும் விட அதிக நம்பிக்கை தருகிற குறி வேறொன்று உண்டு!

நாம், என்ன காரணத்தினாலும் சோம்பிக்கிடந்திட மாட்டோம்—நம்மைத் தூற்றுவோர் நமக்கு பேருதவி புரிகிறார்கள்!

அவர்கள் செய்து வரும் எதிர்ப்பும், கொட்டி முழக்கும் கண்டனங்களும், நம்மை, தரமும் திறமும் குறையாமல் வேலை வாங்கும் எஜமானர்களல்லவா!

அதிலும் அவர்கள், ‘பிரமாண்டமான’ போராட்டத்தில் ஈடுபடப்போகிறார்களாமே! சும்மாவா இருப்பார்கள்! உலகினரே காண்மின்! இதோ நாங்கள் உயிரைத் துரும்பென மதித்து, உடமைகளைத் துச்சமென்று ஒதுக்கித் தள்ளிவிட்டு, உரிமையைக்காக்க, மானத்தை மீட்க போரில் ஈடுபடுகிறோம் இந்தப் பயல்களை அனுப்பினீர்களே, என்ன ஆனார்கள்? என்ன செய்கிறார்கள்? தமிழர்கள் கண்டது என்ன? என்றெல்லாம், ‘பட்டாசுகளை’க் கொளுத்தி வீசியபடி அல்லவா இருப்பார்கள்!

தம்பி! நாம் கல்லக்குடிக் கிளர்ச்சியும், இரயில் நிறுத்தக் கிளர்ச்சியும், நடாத்தியபோது அவர்கள்

இதெல்லாம் ஒரு கிளர்ச்சியா? குப்பை' கூளம்

என்றெல்லாம் கேலி பேசி வந்தனரே, அது போல் இருக்கமாட்டோம், வீரர்காள்! களம் செல்லும் தீரர்காள்! வாகை சூடுமின்! வெற்றியின் பெருமையிலே, பிற எவருக்கும் ஒரு துளியும் பங்கு கிடைத்திடலாகாது, அனைத்தும் உமக்கே இருத்தல் வேண்டும் என்று விரும்புகிறோம் பங்குக்கு நாங்கள் வந்துவிடமாட்டோம் பக்கம் வந்து நின்று பணிவிடை செய்தால்கூட, பிறகோர் நாள் அதனாலேயே பெரிய கஷ்டமும் நஷ்டமும், தோல்வியும் துயரமும் வந்துற்றது என்று பழி கூறுவீர்கள்—தேர்ச்சி பெற்றவர்கள்—எனவே போரிலே ஈடுபட்டு, வாகை சூடுக! திக்கு நோக்கித் தெண்டனிட்டு, உலகுக்குகூட அறிவிக்கிறோம்—என்று கூறுகிறோம்.

போர்க்கோலம் எதுவரையில்? தேசியக் கொடி கொளுத்தக் கிளம்பிய காலை, தமிழர் தலைவரின் தாக்கீது கண்டு, கலைத்ததுபோலவா, இது போதும், என்பது பற்றி நமக்குக் கவலை எதற்கு? நடைபெறுகிற வரையில் காண்போம். போற்றுதலுக்குரிய தெனின், போற்றத் தயங்கப்போவதில்லை.

ஆனால். தம்பி! போர்ப் பிரகடனம், போர் அறிக்கை விளக்கம், போரில் கலந்துகொள்ள அன்பழைப்பு, போரில் சேராதிருப்போருக்குச் சாபம், போரில் ஈடுபடுவோரின் பட்டியல் வெளியிடுதல், போரில் ஈடுபட வேண்டாம் என்பதற்கு விதிவிலக்குப்பெறும் பிரமுகர்கள் பெயர் வெளியிடுதல், என்ற வழக்கமான—நாடு பலமுறை கண்டிருக்கிற சடங்குகளின் போதெல்லாம் 'சுடச்சுட' நம்மைத்தானே தாக்கப் போகிறார்கள்! போர் நடைபெறும் போதும் சரி, பிறகு போர் நிறுத்தம், நிறுத்தத்துக்கான விளக்கம் பலன் ஆராய்தல், புதுப் போருக்கு ஆயத்தப்படுத்துதல், எனும் கட்டங்களின் போதும் 'கண்டனம் நமக்குத்தானே!

இவைகளைத்தான், நான் நம்மைச் செம்மையாக வேலை செய்யவைக்கும், சாதனங்கள் என்கிறேன்!

வேடிக்கை அல்ல, தம்பி, விசித்திரம் போலத் தோன்றும், ஆராய்ந்து பார் விளக்கமாக, உண்மை தெரியும்.

எனவே, எனக்கு நல்ல நம்பிக்கை இருக்கிறது. சட்டசபையிலே இடம் பெற்றவர்களும் சரி, வெளியே இருந்திடும் கழகக் காவலர்களும் சரி, நெறி தவறமாட்டார்கள், முறை கெட்விட மாட்டார்கள் தரம் குறையாது, திறம் வளரும், ஏனெனில் எவ்வளவு நேர்மையாக நடந்துகொண்டாலும் 'சபித்துக்கொட்ட' தூற்றித் துளைக்க' ஒரு திருக்கூட்டம், சளைக்காது தொண்டாற்றிக் கொண்டிருக்கும்போது, நாம், பணியினையும் மறந்துவிட்டு, நேர்மையினின்றும் தவறிவிட்டால் ஏ! அப்பா! சும்மாவா விடுவார்கள்!!

எனவேதான், அந்தத் 'தூற்றல்'—நம்மை 'வேலை செய்யவைக்கும்'—என்ற நம்பிக்கை எனக்கு.

அவர்கள், பாராட்டிவிட்டால், பட்டுபோய்விடுவோம், என்ற பயம் எனக்கு உண்டு!

அவர்கள், எப்படியோ தொலைந்து போகட்டும், நாம் நமது வேலையைப் பார்த்துக் கொண்டிருப்போம், என்று அலட்சியமாக இருந்துவிட்டால், நாம் 'மந்தமாகி'விடுவோம்!!

நமது கழகத்தைக் குறித்து, நாட்டுமக்களில் பெரும்பகுதியினர் ஆச்சரியப்படுவதே இந்தச் சூட்சமம் புரியாததால்தான்.

இவ்வளவு ஏசுகிறோம்; பொருத்தம் அர்த்தம்கூடப் பார்க்காமல் தூற்றுகிறோம், சொல்லக் கூசும் வார்த்தைகளை வீசுகிறோம்; இவ்வளவையும், இந்தப் பயல்கள் சுமந்துகொண்டு கருமமே கண்ணாயினர் என்றல்லவா இருக்கிறார்கள்—என்று வசவாளர்களே ஆச்சரியப்படுகிறார்கள்.

நாம் அவர்களின் 'அர்ச்சனை'யை எப்படிப் பயன்படுத்திக்கொள்கிறோம் என்ற சூட்சமம், புரியவில்லை, பாபம்!

"ஊதுகுழல் வேண்டுமா, ஊது குழல்?"

என்று கேட்டான், நடைபாதை வியாபாரி;

வேண்டாமப்பா,

என்று கூறினான், அவ்வழி சென்றவன்.

பொத்தான் வேண்டுமா?

பேனா வேண்டுமா?

சாக்லெட் வேண்டுமா?

சாயப்பவுடர் வேண்டுமா?

சோப்பு, சீப்பு, கண்ணாடி, ப்ரோச், பின். வேண்டுமா?

என்று வியாபாரி, விடாமல் கேட்டுக்கொண்டே இருந்தான்.

அவ்வழி வந்தவருக்குப் பெருத்த தொல்லையாகி விட்டது; அவர் அங்காடி, வந்தது எதையும் வாங்க அல்ல; யாரையோ சந்திக்க! வியாபாரி, விடாமல் தொல்லை கொடுக்கக் கண்டு, அவர், கோபத்துடன்,

ஒன்றும் வேண்டாமப்பா, போய்த்தொலை!

ஒரே தலைவலியாகிவிட்டது உன்னாலே!

என்றார்

அருமையான தலைவலி மருந்து இருக்கிறது!

ஆறே அணா? வேண்டுமா?

என்று கேட்டானாம், வியாபாரி!

தம்பி! அந்த 'ஆசாமி'யின் 'சகிப்புத்தன்மை'யில் பெறத்தக்க பாடம் இருக்கிறது!!

ஒரு விஷயம், நீ, கவனித்தாயோ இல்லையோ, எனக்கு அது நெஞ்சில் பதிந்திருக்கிறது. நம்மை, இந்த அளவுக்கு அவர்கள், தூற்றிக்கொண்டு இருந்திராவிட்டால், நாட்டு மக்களில் நல்லவர்கள், நம்மிடம் இந்த அளவுக்கு, நல்லெண்ணம் காட்டி, ஆதரவு அளித்திருக்கக்கூடமாட்டார்கள்.

நமக்கு வாக்களித்த பதினேழு இலட்சம் மக்கள்' அனைவருமே, நம்மாலே மட்டுமே நமக்கு ஆதரவாளர்களாக்கப் பட்டவர்கள் அல்ல; பெரியாரின் பெரும்படையினர். இந்தப் பதினேழு இலட்சத்தில், சில இலட்சங்களை நமக்காகத் தேடித் தயாரித்துத் தந்துள்ளனர். நான், நன்றி கூறிக் கொள்ளும் ஒவ்வொரு சமயத்திலும் இதை மறவாதிருக்கிறேன்.

தம்பி! நாம் பெற்ற வெற்றிக்கான, பல காரணங்களில் இது முக்கியமானது, என்பதை மட்டும் எப்போதும் மறவாதே!!

இனி, நாம் பெற்ற வெற்றிபற்றி அனைவரும், அதன் அளவு குறைவு, எனினும், ஆச்சரியத்துடன் கவனிப்பதற்குக் காரணம் இருக்கிறது.

பிறபிற கட்சிகள், நாங்களும் அமைச்சர்கள் ஆகக்கூடும்—ஆகவேண்டும்—ஆக விரும்புகிறோம் என்று சொல்கின்றன. தி. மு. க. நாங்களும் அமைச்சர்களாக முடியும் என்பதை எடுத்துச் சொல்லுகின்ற கட்சி அல்ல—எங்களுக்கென்று ஒரு தாயகம், அதற்குப் பழம்பெரும் நாகரிகம் இருந்தது; அதன் கொடி வானளாவப் பறந்தது. அதனுடைய நாவாய்கள் எத்திசையும் கடலில் செல்லும், அதனுடைய பட்டுபட்டாடைகளை ரோம் நாட்டிலே வாங்கி அணிந்து கொண்டார்கள், அவர்களுடைய முத்தை யவன நாட்டு மக்கள் விலைபோட்டு வாங்கினார்கள்—அதனிடத்திலே காடு இருக்கிறது; அந்தக் காட்டிலே அகில் இருக்கிறது; சந்தனம் இருக்கிறது. அந்த மண்ணைத் தோண்டினால், தங்கம் கிடைக்கிறது, இரும்பு கிடைக்கிறது, நாட்டிலே கரும்பு போட்டாலும் விளைகிறது—காட்டாக இருக்கிற புகையிலை போட்டாலும் விளைகிறது—இப்படிப்பட்ட அரும்பெரும் நாடு எங்களிடம் உண்டு. அந்த நாட்டினுடைய துரைத்தனம் எங்களிடத்திலே இல்லை அது ஆயிரம் ஆயிரத்தைந்நூறு மைல்களுக்கு அப்பாலே

இருக்கிற டெல்லி புதிய பாதுஷாக்களிடத்திலே ஒப்படைக்கப்பட்டது. அதைத் திரும்பப்பெற்றுத் தாயகத்தைத் தனித் தரணியாக்கித் தன்னாட்சி செலுத்துவதற்கு நாங்கள் ஏற்பட்டிருக்கின்றோம் என்று சொல்கிற கழகம் தி. மு. க. ஒன்றுதான். ஆகையினாலேதான், இது பெற்ற வெற்றியைப் பற்றி பலபேர் ஆராய்கிறார்கள். உதாரணம் உங்களுக்குச் சொல்லவேண்டுமானால் ஆட்டினுடைய கழுத்தை வெட்டிக்கொண்டு வந்து உங்களிடத்திலே காட்டினால் ஆச்சரியத்தோடு பார்க்கமாட்டீர்கள். புலியின் நகத்தைக் கொண்டுவந்தால் 'புலி நகமா' என்று ஆச்சரியத்தோடு பார்ப்பீர்கள் தி. மு. க. புலி நகத்திற்குச் சமம்—பிறபிற கட்சிகள் வெட்டுப்பட்ட ஆடுகூட அல்ல துள்ளி ஓடுகின்ற ஆட்டுக்குட்டு என்றுகூட வைத்துக்கொள்ளுங்கள்—மக்கள் அதனைக் கவனிக்க மாட்டார்கள்.

இங்ஙனம் கவனிக்கின்றவர்கள்—அரசியல் அலுவலே, தேவையுள்ள காரியம் என்று கருதுபவர்கள்—அடுத்தபடியாக "சரி, சரி—காரணம் கிடக்கட்டும். எப்படியோ 15 பேர் வந்துவிட்டீர்கள்? என்ன செய்யப் போகிறீர்கள் என்று கேட்கின்றனர்.

நாலைந்து நாட்களுக்கு முன்பு, உத்தரமேரூர் என்ற ஊரில் பேசும்போது, நான் இதற்குப் பதிலளிக்கும் தன்மையில் கூறியது நினைவிற்கு வருகிறது.

"எதிர்க் கட்சியில் இருந்துகொண்டு என்ன செய்யப் போகிறீர்கள்? என்று எங்களைக் கேட்கின்றனர், காங்கிரஸ் தலைவர்கள். என்ன செய்யச் சொல்கிறீர்கள்? என்று நான், அவர்களைக் கேட்கிறேன்"—என்று அன்று பேசினேன்.

உண்மையிலேயே ஆளும் கட்சி, எதிர்க்கட்சியில் உள்ளவர்கள், என்ன செய்யவேண்டுமென்று, விரும்புவர், என்பது, ஆளும் கட்சியின் பண்பு பயிற்சி, நினைப்பு, நோக்கம், அந்தக் கட்சிக்கு ஜனநாயகத்திலே உள்ள நம்பிக்கை, இவைகளைப் பொறுத்து இருக்கிறது!!

இவை, ஆளுங் கட்சிக்கு எந்த வகையில் இருக்கிறதோ, யார் கண்டார்கள்?

'ரசம்' கலையாத கண்ணாடி முன் நின்று பார்த்தால்தான், 'முகம்' சரியாகத் தெரியும்! ஜனநாயகப் பண்பு கெடாதநிலை, ஆளுங்கட்சிக்கு இருந்தால்தான், எதிர்க் கட்சியின் தரம் தெரியும்!!

தொல்லை தரவேண்டுமென்று நாங்கள் எதிர்க் கட்சி அமைக்கவில்லை. ஆனால் நாங்கள் செய்கின்ற நல்ல காரியங்களையெல்லாம் நீங்கள் தொல்லையென்று நினைக்கவேண்டாம் என்று அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்வேன். ஏனென்றால் தாய், திருவிழாக் காலத்தில் சாமியைப் பார்த்துக்கொண்டிருக்கின்ற நேரத்தில் பசிக்கின்ற குழந்தை தாயைக் கேட்கின்றது ஏதாவது வாங்கித் தரச்சொல்லி, அந்த நேரத்திலே தாய்க்கு குழந்தையினுடைய பசி தெரியாது, எதிரிலே இருக்கின்ற திருவிழாக் கோலந்தான் தெரியும், அந்தக் கோலத்தைப் பார்த்துக்கொண்டே பசியோடு இருக்கின்ற குழந்தை பிராண்டுகின்ற நேரத்தில் தொல்லை தருகிறாயே என்று அடித்துத் தாயே தன்னுடைய குழந்தையை தவறாக நினைக்கின்ற நேரத்தில், எதிர்க்கட்சிக்காரர்களை நாட்டையாளுகின்ற அமைச்சர்கள் தவறாகக் கருதுவார்கள் என்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. தாய் தன்னுடைய குழந்தையை—பசிக்கின்றது என்று தெரிந்தும் அது தொல்லை தருகின்ற காரணத்தினால் கண்டிப்பதானால், நாங்கள் செய்கின்ற நல்ல காரியத்தையும் தொல்லையென்று அமைச்சர்கள் கருதக்கூடும்—தோன்றும், எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் எடுத்துச் சொல்லுகின்ற கருத்துக்களை எடுத்துச் சொல்லுகின்ற திட்டங்களை ஆராய்கின்ற நேரத்தில் அனுதாபத்தோடு ஆளுங்கட்சி கவனிக்க வேண்டும்.

அனுதாபத்தோடு கவனித்தால்தான் எதிர்க் கட்சிக்கு ஆளுங்கட்சியினிடத்து மதிப்புப் பிறக்கும்.

• • •

மாயவரத்தில், சிறப்புச் சொற்பொழிவின்போது, நான் இதுபோலக் கூறினேன். ஏன் தம்பி சரிதானே எதிர்க்கட்சியின் இயல்பு, போக்கு, ஆளுங்கட்சியின் தன்மையைப் பொறுத்துத்தானே அமையும் அதைத்தான், சொன்னேன்.

விழாக்கள்போல நடத்தப்பட்டு வரும் கூட்டங்களில், இந்த விளக்கங்களை, நமது தோழர்கள் தந்து வருகின்றனர்.

விழா—வெற்றி தந்த உற்சாகத்தின் விளைவு!

விழா மூலம் புதிய உற்சாகமும் கிடைக்கிறது,

எத்தனை எத்தனை புதிய கழகங்கள் அமைகின்றன தெரியுமோ!!

பெறவேண்டிய வெற்றி என்றால் 15 இடத்தை இப்போது பிடித்தோம் இனி அடுத்த முறை 100-இடத்தைப் பிடிக்கவேண்டும் என்பது மட்டும் அல்ல, அது மட்டும் நம்முடையது என்றால் தேர்தலுக்காகவே துவக்கப்பட்ட ஒரு கட்சியாக இருக்கவேண்டும். ஆனால் நம்முடைய கழகம் தேர்தலுக்காகவே மட்டும் துவக்கப்பட்ட கழகம் அல்ல, ஆகையினால் எதிர்கால வெற்றி என்று நான் கவனப்படுத்துகின்ற நேரத்தில், பிடிக்கவேண்டிய இடங்கள் இத்தனை என்று தூண்டுகின்றேன் என்று அர்த்தமல்ல, பிடிக்க வேண்டிய இடங்கள் அதிகமாகக் கிடைக்கலாம்; பெற்றுத் தருவீர்கள்; ஆனால் நாம் பெறவேண்டிய வெற்றி சட்டசபையிலே அதிகமான இடங்கள் என்பது மட்டுமல்ல, நமது தாய்த்திருநாடு நமக்குத்தான் உரியது என்ற உண்மை எந்தெந்த உள்ளத்திலே ஏறாமல் இருந்ததோ எந்தெந்தச் செவியிலே புகாமல் இருந்ததோ, அந்தச் செவிவழி புகுந்து அவர்களுடைய நினைவிலே நின்று, நெஞ்சத்திலே பதிந்து அவர்களுடைய நிலைமையை மாற்றி, மனமாற்றத்தை ஏற்படுத்தித் தரவேண்டும், தாய்த்திருநாட்டை மீட்பதற்காக, நாம் எடுத்துக் கொள்ளுகின்ற பல்வேறு வகையான முயற்சிகளில் சட்டசபைக்குப் போகின்ற முயற்சியும் ஒன்று. சட்டசபைக்குப் போகின்ற முயற்சியும் ஒன்று என்று நான் சொல்லுவதைவிடச் சட்டசபைக்குப் போகிற முயற்சி பல முயற்சிகளிலே தரத்திலே சாதாரணமானது என்றும் கூறுவேன். சட்டசபைக்குள்ளே போய் திராவிடநாடு கொடுங்கள் கொடுங்கள் என்று அமைச்சர்களின் குரல்வளைகளைப் பிடித்து அழுத்த முடியாது, நாங்கள் அங்கே செய்யக்கூடியதெல்லாம் விஷயங்களை விவாதிக்கப்பட்டால் அவற்றிற்கு ஒளி தருகின்ற அளவுக்கு அறிவுத் தெளிவோடு விவாதிக்கலாம், கேடு தருகின்ற காரியத்தைக் காங்கிரஸ் அமைச்சர்கள் செய்ய முற்பட்டால் எங்களுடைய வலிவைத் திரட்டி எங்களுடைய ஆற்றலைத் துணைக்கழைத்துக்கொண்டு அவர்களைத் தடுக்கலாம், அவர்கள் நல்ல காரியங்களைத் தப்பித்தவறிச் செய்தால், அந்த நல்ல காரியத்திற்கு அவர்களை மனமாரப் பாராட்டலாம், இவைகளைத்தான நாங்கள் செய்யலாம்.

தாய்த் திருநாட்டை மீட்கும் பணியில் சட்ட-

[14-ம் பக்கம் பார்க்க]

# காந்தி நூற்றாண்டு விழா!



பொது வாழக்கையில் தூய்மையும் ஒழுங்கும் நிலவவேண்டுமென போதித்ததுடன், வாழ்ந்தும் காட்டினார்—காந்தியடிகள். ஆனால், நம் கொள்கைகளுக்கும் செயற்பாடுகளுக்கும் இடையே நீண்ட இடைவெளி இருக்கிறது. அவதூறுப் பேச்சுக்கள்—லஞ்சக் குற்றங்கள், உறவினருக்குச் சலுகைகள் போன்ற ஒழுக்கக் கேடுகள் இன்றைய நம் அரசியலைக் கெடுத்துக்கொண்டிருக்கின்றன.

—அறிஞர் அண்ணா.

# வினா-விடை

**எம். சே. மதிவாணன், பரங்கூர்.**

நாட்டில் மிகவும் கெட்டுப் போயிருப்பது எது?

மனிதனின் 'இதயம்' என்றால் உங்களுக்குக் கோபம் வராதே!

**ஜே. சிவனேஸ்வரி, சென்னை.**

தொழிற்சங்கங்கள் அமைத்துக் கொள்வதற்கு அரசின் அனுமதி கட்டாயம் தேவையா?

இந்தியாவைப் பொருத்த மட்டில் அது கட்டாயம் தான், ஆனால் ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசில், அரசு ஊழியர்கள் உட்பட, அரசின் எந்த அனுமதியுமின்றி சங்கம் அமைத்துக்கொள்ள முடியும் என்று தெரிகிறது. ஆனால் இந்த தொழிற்சங்கங்கள், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குக் குந்தகம் விளையும் விதத்தில் எந்த நடைமுறைகளையும் மேற்கொள்வதில்லை

**கே. முகைதீன்பிச்சை, திருவாரூர்.**

மகாத்மா காந்தி, சீன நாட்டு சியாங்கே ஷேக்குடன் தொடர்பு கொண்டிருந்தாராமே?

அது மட்டுமல்ல; பெர்னார்டு ஷா, டால்ஸ்டாய் போன்றவர்களுடன் கூட தொடர்பு கொண்டிருந்திருக்கிறார் என்பது வரலாறு ஐயா!

**எஸ். சுந்தரராசன், திருச்சி.**

ஆந்திர மாநிலத்தில் மதுவிலக்கு அடியோடு ரத்துச் செய்யப்படப் போகிறதாமே?

காந்தியடிகள் பிறந்த நூற்றாண்டு விழா கோலாகலங்களும், கொண்டாட்டங்களும் முற்றுப்பெற்று விட்டன என்பதை ஆந்திரா, இந்த வழியில் எடுத்துக்காட்டி இருக்கிறது. இதில் தவறென்ன கண்டீர்கள்!

**மு. பரமகுரு, மதுரை.**

சென்னையில் பிரதமர் இந்திரா காந்தி, காங்கிரஸ் ஊர்வலத்தைப்பார்வையிட மறுத்ததன் காரணம் என்ன?

பிரதமரிடம் கேட்க வேண்டிய கேள்வி இது எனினும், காங்கிரஸ் நிகழ்ச்சிகள் அனைத்தையும் ரத்துச் செய்துவிட்டதாலும் ஊர்வலம் காங்கிரஸ் நிகழ்ச்சி என்பதாலும், அதில் தான் கலந்து கொள்வது முறையாகாது என்பதாலும் மறுத்திருக்கக்கூடும்என்பதேவெளிப்படையாகக் கூறவேண்டிய பதில்! உள்ளே எல்லாம் துருவி ஆராயக்கூடிய அளவுக்கு இன்றைய காங்கிரசின் நிலைமை இல்லை.

**அழகுமுத்து, அரியலூர்**

கேரளாவில் இப்போது என்ன நடந்து கொண்டிருக்கிறது?

கிரிக்கெட் விளையாட்டோ, கால்பந்துப்போட்டியோ அல்ல —ஜனநாயகத்துக்குப் பயங்கரமான ஒரு சோதனை நடந்து கொண்டிருக்கிறது.

**எஸ். அப்துல் ரகீம், அதிரை**

"ரபாட்" தகராறு பற்றி சிறிய விளக்கம் தர முடியுமா?

சில முஸ்லிம் நாடுகள் கூடி மாநாடு ஒன்று நடத்த முன் வந்தன. பாகிஸ்தானும் அதில் கலந்துகொண்டது. மாநாடு நடத்தப்பட வேண்டும் என்று யோசிக்கும் போதே, இந்தியாவை அழைப்பதில்லை என்று முடிவு செய்திருந்தனராம். ஆனால் இந்தியா, தன் நாட்டிலும் பெருவாரியான முஸ்லிம்கள் இருப்பதாகக் கூறி, தனக்கும் பிரதிநிதித்துவம் தரப்பட வேண்டும் என்று கேட்டதாம்! வற்புறுத்தலுக்காகவே அழைப்பு அனுப்பப்பட்டதாம். பின்னர் மாநாடு கூடியபோது, குறிப்பாக பாகிஸ்தானின் எதிர்ப்பு மிகுந்திருந்ததனால் இந்தியப் பிரதிநிதி அனுமதிக்கப்படவில்லையாம், மூக்கறுபட்டுத் திருப்பியதாகக் கூறப்படுகிறது. ஒருவனை காதில் எடுத்து விட்டுக் கொள்வானேன் — குத்துகிறதே, குடைகிறதே என்று கூப்பாடு போடுவானேன்?

**து. அன்புமணி, சேலம்.**

தமிழ்நாட்டுக் காங்கிரசுக்கட்சித் தலைவர் பதவி, ஓடிப்போன சம்பத்துக்குக் கிடைக்கும்என்று கூறப்படுகிறதே, உண்மையா?

இது உண்மையான தகவல் என்று நம்பமுடியவில்லை. காங்கிரசுக் கட்சியில், இந்த அளவுக்கு நல்லவர்களும், அறிவாளர்களும் அற்றுப்போய் விடவில்லை. செய்தி உண்மையாக இருக்குமானால், காங்கிரசைக் கலைத்துவிட வேண்டும் என்ற காந்தியாரது கனவை, நிறைவேற்றும் பொறுப்பை, த. நா. கா. ஏற்றுக்கொண்டுவிட்டது என்பதுதான் சரியானதாக விருக்கும்.

**கு. கஜபதி, அரக்கோணம்.**

மாணவர்கள் அரசியலில் ஈடுபடுவதைத் தடுக்க என்ன செய்ய வேண்டும்?

துணைக் கண்டத்திலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் ஒரு அரங்கில் கூடி, இனி மாணவர்கள் இருக்கும் திசையில்தலைவைத்தும் "படுப்பதில்லை" என்று ஒரு முடிவினை மேற்கொள்ளவேண்டும். இதேபோல் தமிழகமெங்குமுள்ள மாணவர்களின் பிரதிநிதிகள் ஓரரங்கில் கூடி "இனி அரசியல் கூச்சல்களைக் காது கொடுத்துக் கேட்பதில்லை" என்று சூளுரைத்துக்கொள்ள வேண்டும்! நடக்கிற அல்லது நடக்கப்போகிற காரியமா இது! அவ்வளவுதான்...!

**காந்தீயன், புள்ளம்பாடி.**

தலைவர் பதவியிலிருந்துவிலகிய சுப்பிரமணியத்தை கட்சியிலிருந்தே வெளியேற்றிவிட முயற்சிகள் நடப்பது தெரியுமா?

தலைவர்பதவியிலிருந்து துரத்துவதற்கே காமராசர் மிகச்சிரமப்படவேண்டி இருந்ததாம்.

உறுப்பினர் பொறுப்பிலிருந்தும் வெளியேற்றுவதானால், தன் முழுச் சக்தியையும் திரட்டித் தீரவேண்டி இருக்கலாம். அதற்குள் காங்கிரஸ் என்ற நிறுவனமேகூட முழுமையாகப் புறக்கணிக்கப்பட்டுப் போனாலும் ஆச்சர்யப்படுவதற்கு ஏதுமில்லை. அப்புறம் அவராக வெளியேறினால்தான் என்ன? வெளியேற்றப்பட்டால்தான் என்ன?

டி. டி. நரசிம்மன், தக்கோலம்.

"கள்ளுக்கடைகளைத் திறந்த பிறகும், பணம் போதவில்லை என்றால், திருட்டுக்குக் குத்தகை விடுவதா? என்று சென்னையில் காமராசர் பேசி இருப்பது எதைக் காட்டுகிறது!

அந்தக் குத்தகை தனக்குக் கிடைக்காதா என்ற ஏக்கத்தைக் காட்டவில்லை, அவரது மூளைப் பகுதியில் எந்த அளவுக்கு சேறும், சகதியும் சேர்ந்திருக்கிறது என்பதையும், கர்னாடகம், ஆந்திரா போன்ற மது விலக்கப் பெறாத மாநிலங்கள் இந்த யோசனையை ஆராய வேண்டும் என்று ஆசைப்படுகிறார் என்பதையும், தன் பரம்பரைப் புத்தி எத்தகையது என்பதையும் காட்டுகிறார் என்று தெரிகிறது.

செ. ஆறுமுகம், கோவை.

அமைதி எங்கே பிறக்கிறது?

தெளிந்த உள்ளத்தின் ஆழத்திலிருந்து என்று சிலரும், சமாதி அல்லது புதைகுழியின் அடியில் என்று சிலரும் கூறுகிறார்கள். நிச்சய , காமராசர் இதயத்தில் மட்டும் அமைதி பிறக்கும் சாத்யக்கூறு ஏதுமில்லை.

★

4-ம் பக்கத் தொடர்ச்சி

வானில் இலட்சியச் சுடராய் திகழ்பவர் வான்புகழ் வள்ளுவர் என்பதையும் இன்னபிற வள்ளுவரின் சிறப்புக்களையும் கன்னல்நிகர் தமிழோடு கனிச்சாறு கலந்தாற்போல் கருத்துக்களைச் சேர்த்து தக்கமுறையில் தமிழ்ச்சொல் விருந்து படைத்தார், அன்னாரின் சொற்பொழிவுக்குப் பின், தென்னிந்திய மகளிர் மன்றத்தின் சார்பில் ஓரங்க நாடகங்களும் நாட்டிய நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. திருமதி வசந்தா ராகவன் மற்றும் மகளிர் மன்றப் பொறுப்பாளர் அனைவருடைய ஒத்துழைப்போடும் கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன, தென்னிந்தியக் கழகச் செயலாளர் திருவாளர் கிருஷ்ணமூர்த்தியின் பணி பாராட்டத்தக்கது நாட்டு வாழ்த்துடன் விழா இனிது முடிந்தது.

—கங்கை வளவன்

11-ம் பக்கத் தொடர்ச்சி


சபைக்குச் செல்லுவதென்பது தரத்திலே சாதாரண முயற்சி. ஆனால் அந்த முயற்சி தரத்திலே உயர வேண்டுமானால், நாங்கள் அங்கே உள்ளே இருக்கின்ற நேரத்தில் வெளியிலே இருக்கிற நீங்கள் கழகத்தை இப்போது இருப்பதைவிட அதிக வலிவுள்ளதாக்கினால் கழகத்திலே இப்போதுள்ள உறுப்பினர்களைப்போல் இரட்டிப்பு மூன்று மடங்கு நான்கு மடங்கு என்று நீங்கள் அதிகப்படுத்திக் காட்டினால், நம்முடைய கொடி பறக்காத ஊரில்லை; நம்முடைய குரல் கேட்காத பட்டி தொட்டி இல்லை; என்று சொல்லத்தக்க அளவு நீங்கள் நம்முடைய பிரசாரத்தை வலிவுள்ளதாகவும் ஆக்கினால், வெளியிலே நீங்கள் கட்டிக் காக்கின்ற கோட்டையைச் சுட்டிக் காட்டிவிட்டு, உள்ளே இருக்கிற நாங்கள் ஏற்றம் பெறலாம். வெளியிலே கழகம் கலகலத்தது என்றால் உள்ளே 15 பேர் இருந்து, பயனில்லை, 150 பேர் இருந்தும் பயனில்லை.

ஆகவே தம்பி வெற்றிக் களிப்பிலே விழா தரும் மகிழ்ச்சியிலே இனி ஆகவேண்டிய காரியத்தை மறந்துவிடாதே,

உனக்கும், உள்ளே சென்றுள்ளவர்களுக்கும் புதிய பொறுப்பு ஏற்பட்டுவிட்டது; புதியதோர் நிலைமை—அதற்கு ஏற்றபடி நமது பணியின் அளவும் தரமும் வளரவேண்டும்.

உன்னால் முடியாததையா செய்யச் சொல்லுகிறேன்!!

அண்ணன்,



(28—4—57 திராவிட நாடு இதழில்)



## வரமான பேரறிஞன்!

வண்டாடும் மலர்மென்மை நெஞ்சன்! பாரில்
தண்டாடத் தேன்சொரியுந் தமிழர் நாட்டில்
கொண்டாடும் புகழுடையோன்! மக்க ளுள்ளம்
பொன்வேண்டா அவன்கருத்தே வேண்டுஞ் செம்மல்!

இமிழ்கின்ற கடலுக்குள் முத்தம் உண்டு!
கமழ்கின்ற மலருள்தேன் உண்டே, அண்ணா
தமிழென்ற பேச்சினிலோ மகிழ்வில் மக்கள்
அமிழ்கின்ற அமிழ்தென்ற சுவையுன் டன்றோ?

பழியொன்றைத் தாழ்மையுற வஞ்சர் கூறிப்
பிழிகின்ற கரும்பெனவே வருத்தும் போதும்
மொழிகின்ற அன்புக்கோர் எல்லை யுண்டோ?
விழியென்ற பேரறிஞப் பெருந்தகைக்கு!

மரமான நெஞ்சத்தைச் சொக்க வைக்கும்
தரமான அறிவொழுகும் சொற்க தம்பச்
சரமாகி மணம்வீசித் தமிழருக்கு
வரமான மனிதகுலப் பெரியோன் அண்ணா!

கொதிக்கின்ற கயமைமனங் குலவிக் கொஞ்சும்
குதிக்கின்ற குளிரருவித் தரத்தால் காலம்
துதிக்கின்ற திருவுளத்தோன் அண்ணா நாமம்
உதிக்கின்ற உதயம்போல் உலகில் வாழும்!

—கு. பிரான்சிஸ்

௨-ம் பக்கத் தொடர்ச்சி

மன்ற நீதிபதிகள்பதினெட்டுப்பேரில் பதினான்கு பேர் தமிழர்கள் என்ற பெருமித நிலைமையை இன்றைக்கு ஏற்படுத்தியிருக்கிறது. பெரியாரது உழைப்பு, பெரியாரது போராட்டம்; பெரியாரது எழுத்து; பேச்சு என்கிறார் திரு. சுந்தரவடிவேலு.

என்ன தவறு?

அவர் சொன்னது உண்மையல்லவா? அவர் சொன்னது இப்படி ஒரு கருத்தையே தவிர — சில பிராமண நண்பர்கள் கொதிப்படைந்திருப்பதற்குக் காரணமான கருத்தையல்ல!

"காந்திஜியின் போராட்டத்தால் இந்தியர்கள் இந்தியாவை ஆளும் அளவுக்கு உயர்ந்திருக்கிறார்கள்" என்று சொன்னால் உடனே அவர் "வெள்ளைக்காரர்களுக்கும், இங்கிலாந்து ராணிக்கும் துரோகி என்றோ —வகுப்புவாதம் பேசுபவர் என்றோ "பாஷ்யம்" பண்ணிக்கொண்டு வேதனைப்படுவது எப்படித் தேவையில்லாததோ அப்படியே "பெரியாரது போராட்டங்களால் தமிழர்கள் உயர்நீதி மன்றத்தில் நீதிபதிகளாக இருக்கிறார்கள்" என்பதற்கும் வேதனைப்படுவது என்பது தகாதது. தேவையில்லாதது.

காந்திஜியின் போராட்டத்தால் இந்தியர்கள் இந்த நாட்டையாளும் பிரதமர்கள் ஆனார்கள் என்று சொன்னால் அவர்கள் வெள்ளைக்காரர்களை வெறுத்துத்தான் தீர வேண்டுமா? வெள்ளைக்காரர்களை வெறுத்ததால்தான் அவர்கள் நாட்டையாளும் தகுதி பெற்றார்கள்என்று வாதிட முடியுமா? அல்லது காந்திஜியின் போராட்டந்தான் அப்படி அமைந்ததா? இல்லையே.

அதுபோல பெரியார் இராமசாமி பிராமணர்களை வெறுத்தார் என்பதைவிட அவர்களைப்போல தமிழர்களனைவரும் வளரவேண்டும் என்று பாடுபட்டார்—என்பதே நியாயமான முடிவாக இருக்க முடியும்.

இந்துப்பத்திரிகையில் திரு. சுந்தரவடிவேலு அவர்களைக் கண்டிக்கும் நண்பர்கள்கூட "நாங்களும் தமிழர்கள்தான். தமிழ்ச்சமுதாயத்தின் முக்கிய அங்கம் நாங்கள். சரித்திரம் அதற்கு ஆதாரம்" என்கிறார்கள்.

வரவேற்கவேண்டிய கருத்து. பூரிப்புடனும் இதயத் தூய்மையுடனும் வரவேற்கிறோம். நீங்களும் தமிழர்கள்தான் என்று நீங்களே சொன்னால் அதை அப்படியே ஏற்றுக் கொள்கிறோம். நீங்கள் அப்படிச் சொன்னால் பிறகு, 'பிராமணர்களை வெறுக்கிறார் திரு. சுந்தரவடிவேலு' என்கிற வாதம் எங்கிருந்து வந்தது? அதனை எழுப்புபவர் யார்? 'அவர்களும் தமிழர்களே' என்கிறீர்களா? நன்றி. அப்படியே வைத்துக் கொள்வோம். தமிழர்களில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள தமிழர்கள் உயர்நீதி மன்றத்தில் நீதிபதிகளாகவும், அரசாங்க அலுவலகங்களில் பெரும் அதிகாரிகளாகவும், புத்திசாலிகளாகவும் இருக்கிறார்கள். மீதமுள்ள தமிழர்களே! நீங்களும் நம்மில் ஒரு பகுதித் தமிழர் முன்னேறுவதுபோல முன்னேற வேண்டாமா என்று பெரியார் இராமசாமிகேட்கவேண்டியிருந்தது என்பதைத் தமிழர்கள் என்று சரித்திர ஆதாரத்துடன் உங்களை அழைத்துக்கொள்ளும் நீங்கள் மறுக்க மாட்டீர்கள்—மறுக்க நியாயமில்லை. ஏனென்றால் பெரியார் இராமசாமி தமிழர்களுக்குத்தானே பாடுபட்டார் தமிழர்களின் முன்னேற்றத்துக்குத்தான் போராட்டங்கள் நடத்தினார்!

அதைத்தானே திரு. சுந்தரவடிவேலு சொன்னார். என்ன தவறாகச் சொல்லிவிட்டார் என்கிறீர்கள்?

அவர் உண்மையைச் சொன்னார். அதற்கு நீங்கள் "பாஷ்யம்" பண்ணும்போது தடுமாறிவிட்டீர்கள். உங்கள் "பாஷ்யத்திலே"தான் வகுப்புவாதம் நெளிகிறதே தவிர, அவர்பேச்சில் இல்லை என்பதை நீங்கள் உணரவேண்டும். அவர் சொன்னது வெறும் உண்மை! உண்மையின்மேல் நீங்கள்தான் சாயம் பூசுகிறீர்கள்.

அவர் பேசியது அரசியலும் அல்ல. ஒரு அரசியல் ஆசிரியர் 'நேரு இந்தியாவின் பிரதமராயிருந்தார்' என்றால் அதுநேற்றுஇன்றைக்குச் சரித்திரம். அதுபோல பெரியார் நடத்திய போராட்டங்களால் உயர் நீதி மன்றத்து நீதிபதிகளில் பதினான்குபேர் இன்றைக்குத் தமிழர்கள் என்றால் அது சரித்திரம்; உண்மை. உங்கள் மீது வீசப்படும் வேல் அல்ல, ஏன் அப்படியென்றால் தமிழ் நாட்டின் உயர்நீதிமன்றத்தில் இருந்த அத்தனைப்பேரும் பிராமணர்களே அல்ல. அதை நீங்களே ஒப்புவீர்கள். வெள்ளைக்காரன்—தெலுங்கர்கள்—மலையாளிகள்—தமிழர்களின் முக்கிய அங்கமாகிய நீங்கள் ஆக இப்படித்தான் சென்னை உயர்நீதி மன்றத்தில் நீதிபதிகள் இருந்திருக்கின்றனர்.

இந்த இடத்தில் நன்றாகக் கவனிக்க வேண்டும். பெரியார் தமிழர்களை உயர்நீதிமன்ற நீதிபதிகளாவும், முதலமைச்சராகவும் மற்றும் அமைச்சர்களாகவும், அதிகாரிகளாகவும்இருந்துபணியாற்றுவதைப் பார்க்க விரும்பியவர். தமிழர்களை உயர்த்த எண்ணிய பெரியார் வெள்ளைக்காரர்கள், தெலுங்கர்கள், மலையாளிகள், பிராமணர்கள் எல்லோரையும்போல வரவேண்டும் என்று போராடினார்—அதன் பலன் இன்றைக்குப் பதினான்கு பேர் உயர் நீதிமன்ற நீதிபதிகள்! இதனைச் சொன்னால் மேற்சொன்ன எல்லோருந்தான் சாதாரணமாக நமக்கு நினைவு வரவேண்டும். அதெல்லாம் இல்லை—பதினான்கு பேரில் மீதமுள்ள நான்கு பேர் நாங்கள்தான் எனவே எங்களைத்தான் குறித்தார் என்று கோபப்படவேண்டாம். மீதமுள்ள தெலுங்கர்களையோ தமிழர் அல்லது பிறரையோ சுட்டிக்காட்டித், "துணைவேந்தரே, பெரியார் போராட்டத்தால் இன்றைக்கு உயர்நீதிமன்ற நீதிபதியாக இருப்பவர்கள் பனிரண்டுபேர்கள்தான். ஏனென்றால் நீங்கள் குறிப்பிட்ட பதினான்கு பேர்களில் இரண்டு தெலுங்கர்கள்" என்று வேண்டுமானால் திருத்தமாகச்சொல்லச் சொல்லிகேட்கலாம்.

அவரும் அவ்வாறே அன்புடன் திருத்திக் கொள்வார்.

அதனை விடுத்து, சாதாரணமாகச் சொன்ன ஒரு உண்மைக்கு "வகுப்புவாதம்," "துணைவேந்தருக்குத் தரம்போதாது," "வழிவிலகிய பேதப்பேச்சு" என்றெல்லாம் பேச வேண்டாம். ஏனென்றால் அவர் பேசியது வகுப்புவாதமல்ல; இன்றைக்கு அரசியல் செய்தியாக இருந்து, நாளைக்கு வரலாற்று நூலில் எழுதப்பட இருக்கும் பேருண்மை!

அப்ப்டிப்பட்டதோர் வரலாற்று உண்மைக்குப் பொருள் கூறிடும் பெரும்பொறுப்பில் இனியேனும், "சரித்திர ஆதாரங்களுடன் தமிழர்களாக ஆகியிருப்போர்" தவறு செய்யாதிருப்பார்களாக!

முகப்பில்:

6–10–69 அன்று பிரதமர் இந்திரா காந்தி சென்னை ராஜாஜி மண்டபத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படங்களைத் திறந்து வைத்தார்.



சாதிக் கொடுமை
புரையோடுகிறது!

சமுதாயக் கேடு
சதிராடுகிறது!

மேடும் பள்ளமும்
மனித வாழ்வை

உயர்வும் தாழ்வுமாக
மாற்றுகிறது!

எப்படி?

## அமரர் அண்ணா

அவர்களின்

# "கலிங்க ராணி"

தொடர் கதையில்!

மாற்று என்ன?

## 2-11-69 முதல் "காஞ்சி"யில் படியுங்கள்!

ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-2
66, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.